

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 138 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 12 – வியாழக்கிழமை 28 டிசம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 138 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 12 - Thursday 28 December 2023 - Chennai 12 Pages ₹ 5.00


## சமூக நீதி, சமத்துவம், சமதர்ம சகோதரத்துவ - மானுட நெறிகளின்படி

# தமிழ்நாட்டை உருவாக்க என்னையே ஒப்படைத்து உழைத்து வருகிறேன்!

## ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சியுரை!

**சென்னை, டிச. 28-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-**

* பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார்

* ஒடுக்கப்பட்ட மாந்தர்களின் விடுதலைக்காகவும், அவர்களுடைய மனித மாண்பை மீட்டு எடுப்பதற்காகவும், அறிவாயுதம் ஏந்திய புரட்சியாளர், அரசியல் சட்ட பிதாமகர் அண்ணல் அம்பேத்கர்

* பேரறிஞர் அண்ணா

* முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் காட்டிய சமூகநீதிப் பாதையில் திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

சமூக நீதி சமத்துவம் சமதர்மம் சகோதரத்துவம் ஆகிய மானுட நெறிகளின்படி தமிழ்நாட்டை உருவாக்கத்தான் என்னை நான் ஒப்படைத்து உழைத்துக் கொண்டு வருகிறேன்.

**ஆதிதிராவிட, பழங்குடியினரின் வாழ்க்கைத் தரம் உயர தனிக்கவனம்!**

எல்லார்க்கும் எல்லாம் என்பதை நிர்வாக நெறியாக கொண்டு திட்டங்களை தீட்டி வருகிறோம். அந்த அடிப்படையில், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள், சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் உயர்த்தி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி மேம்படுத்த தனிக்கவனம் செலுத்தி பல்வேறு நலத்திட்டங்கள் தீட்டி செயல்படுத்தி வருகிறோம்.

இந்தத் திட்டங்களை சிறப்புக் கவனம் எடுத்து அக்கறையோடு தீட்டி செயல்படுத்தி வருகின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி கயல்விழி செல்வராஜ் அவர்களை நான் மனதார பாராட்டுகிறேன். அமைதியாக, அதே நேரத்தில் ஆக்கப்பூர்வமான பணிகளை செய்து கொண்டு வருகிறவர் அமைச்சர் கயல்விழி செல்வராஜ்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 32.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள் மற்றும் சமுதாய நலக்கூடத்தை திறந்து வைத்து, ரூ.138 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விடுதிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ஆதிதிராவிட நலத்துறையின் ஆக்கப்பூர்வ பணிகள்!**

கடந்த மூன்றாண்டு காலத்தில் இந்தத் துறையின் சார்பில் செய்து வருகின்ற திட்டங்களை முன்னெடுத்து இருக்கின்ற முற்போக்கு செயல்களை நான் சுருக்கமாக நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* அரசியலமைப்புச் சட்ட நாயகர், அண்ணல் அம்பேத்கர் அவர்களை போற்றும் விதத்தில் அவர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஐ அனைத்து மக்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்ற அவருடைய விருப்பத்தை எடுத்துச்சொல்கிற 'சமத்துவ நாளாக' நாம் கொண்டாடி வருகிறோம்.

**டாக்டர் அம்பேத்கர் விருதுடன் ரூ.5 லட்சம் பரிசு - தங்கப் பதக்கம்!**

* ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்காக தொண்டாற்றி வருகிற நபர்களுக்கு ஆண்டுதோறும் 'டாக்டர் அம்பேத்கர் விருது' வழங்கப்பட்டு வருகிறது. இப்போது, இந்த விருதுடன் பரிசுத் தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை, தகுதியுரை மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது.

**ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலனில் தனிக் கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்டும் திராவிட மாடல் அரசு!**

● ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் கல்வி பயில கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

● திருத்தி அமைக்கப்பட்ட முனைவர் பட்டப்படிப்புக்கான உதவித்தொகை திட்டத்தின்கீழ் தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் 2,974 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

● வெளிநாடுகளுக்குச் சென்று உயர்கல்வி பயில மாணவர்களுக்கான வருமான உச்சவரம்பு 8 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டு, 31 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

● ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளி விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு மாதந்திர உணவுக் கட்டணம் ஆயிரம் ரூபாயிலிருந்து 1,400 ரூபாயாகவும், கல்லூரி மாணவர்களுக்கு 1,100 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாகவும் நமது அரசால் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது.

● கடந்த மூன்று ஆண்டுகளில் 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 விடுதிகள் உருவாக்கப்பட்டிருக்கிறது.

● அயோத்திதாசப் பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

● இதேபோல, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்றாண்டுகளில் பழங்குடியினர் குடியிருப்புகளில் 475 கோடி ரூபாய் செலவில் 25 ஆயிரத்து 262 அடிப்படை உட்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**பழங்குடியின மக்களுக்கு மாநில ஆணையம் உருவாக்கம்!**

● மக்களிடையே தீண்டாமைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 24 முதல் 30ஆம் நாள் வரை "மனிதநேய வார விழா" நடத்திக் கொண்டு வருகிறோம். தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தை உருவாக்கியிருக்கோம். கடந்த ஓராண்டுகளில் 102 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிற தீருதவித் தொகை தற்போது உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### சென்னை வர்த்தக மையத்தில் இன்று நடைபெறுகிறது ! இந்திய சமூக நீதிப் போரில் முதல் களம் !

# 'வைக்கம் போராட்டம்' நூற்றாண்டு சிறப்பு விழா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - கேரள முதல்வர் பினராயி விஜயன் பங்கேற்பு!

**சென்னை, டிச.28-**

**இந்திய சமூகநீதிப் போரில் முதல் களமான வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா சென்னை வர்த்தக மையத்தில் இன்று (28.12.2023) நடைபெறுகிறது. இந்நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் பங்கேற்கிறார்கள்.**

கேரள மாநிலம் வைக்கத்தில் மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடந்து செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தது. இதை எதிர்த்து, 1924ஆம் ஆண்டு அங்கு மிகப்பெரிய போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்ட நிலையில் போராட்டம் தொடர்ந்து நடைபெற முடியாத நிலை ஏற்பட்டது.

அப்போது, கேரள போராட்டத் தலைவர்கள் தந்தை பெரியார் அவர்களுக்கு கடிதம் எழுதி, இந்தப் போராட்டத்திற்கு நீங்கள் வந்துதான் உயிர் கொடுக்க வேண்டும். உடனே புறப்பட்டு வாருங்கள் என்று கோரினர். கடிதம் கிடைத்ததும், உடனே, தந்தை பெரியார் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து புறப்பட்டு வந்து; வைக்கம் போராட்டத்தை தலைமையேற்று நடத்தி மக்களிடையே மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தினார். போராட்டம் தீவிரமடைந்தது. மக்கள் திரண்டு போராட்டத்திற்கு ஆதரவு அளித்தனர்.

அதனால் தந்தை பெரியார் அவர்கள் இரண்டு முறை கைது செய்யப்பட்டார்கள். முதல் முறை ஒரு மாதமும், இரண்டாம் முறை ஆறு மாதமும் அவருக்கு தண்டனை அளிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் கால்களிலும், கைகளிலும் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அவர் சிரமப்படுத்தப்பட்டார். இடையில் திருவாங்கூர் மகாராஜா இயற்கை எய்திடவே, ராணியார் அனைவரையும் விடுதலை செய்தார். தந்தை பெரியாருடன் சமாதானம் நடைபெற்று, வைக்கம் தெருவில் நடக்கக் கூடாது என்ற தடையை ராணி நீக்கினார். இதனால், தந்தை பெரியார் அவர்களின் போராட்டம் மகத்தான வெற்றியில் முடிந்து வைக்கம் வீரர் என்று அழைக்கப்பட்டார்.

இந்தியாவில் சமூக அளவில் சாதி காரணமாக நிலவிய ஏற்றத்தாழ்வுகளை ஒழித்திட நடைபெற்ற முதல் போராட்டம் இந்த வைக்கம் போராட்டம் ஆகும். இந்தப் போராட்ட வெற்றியின் 100ஆம் ஆண்டினைக் குறிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் சில அறிவிப்புகளை வெளியிட்டார்.

அந்த அறிவிப்புகளின் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசின் சார்பில் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா இன்று (28.12.2023 - வியாழன்) காலை 11.15 மணியளவில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

இந்த விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலரை வெளியிட்டு விழாப் பேருரை நிகழ்த்துகிறார்.

கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" என்ற நூலை வெளியிட்டு முன்னிலையுரை ஆற்றுகிறார்.

"திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விழாச் சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவின்போது செய்தி மக்கள் தொடர்புத்துறை தயாரித்துள்ள 'வைக்கம் போராட்டம்' குறித்த ஆவணப்படம் திரையிடப்பட உள்ளது. மேலும், பள்ளி மாணவர்கள் சார்பில் சமத்துவக் கொண்டாட்டம் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.

---

### மக்களின் வரிப் பணத்தை சுயவிளம்பரத்துக்காகச் செலவிடுவதா?

# பிரதமர் மோடியின் செல்ஃபி பாய்ண்டுக்கு ரூ.1.62 கோடி செலவு!

## ரயில்வே துறை செய்ததாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் சொல்கிறது!

*புதுடெல்லி, டிச. 28 -*

*நாடு முழுவதும் ரயில் நிலையங்களில் அமைக்கப்படும் பிரதமரின் செல்பி பாய்ண்டுகள் குறித்து ஓய்வு பெற்ற ரயில்வே அதிகாரியான அஜய் போஸ் என்பவர், தகவல் அறியும் உரிமை சட்டத்தில் எழுப்பிய கேள்விக்கு ரயில்வே வாரியம் பதிலளித்துள்ளது. அதில், ரயில் நிலையங்களில் பிரதமர் மோடி படத்துடன் அமைக்கப்படும் நிரந்தர செல்ஃபி பாய்ண்டுகளுக்கு 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், தற்காலிக செல்ஃபி பாய்ண்டுகளுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 62 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*டேராடூன், அம்பாலா, டெல்லி, அமிர்தசரஸ், அயோத்தி, சண்டிகர் உள்ளிட்ட ரயில் நிலையங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட செல்ஃபி பாய்ண்டுகள் அமைக்கப்படும் என்று தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட மற்றொரு கேள்விக்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில், திருச்சி, தஞ்சை, திருவாரூர், வேலூர் உள்ளிட்ட 11 ரயில் நிலையங்களில் பிரதமரின் 3டி செல்பி புகைப்படக் கூடங்கள் அமைக்கப்பட உள்ளதும் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் தெரியவந்துள்ளது.*

*மத்திய மண்டலத்தில் மட்டும் இவ்வளவு பெரிய தொகை என்றால், நாடு முழுவதும் உள்ள 18 ரயில்வே மண்டலங்களிலும் இத்தைகய செல்பி பாயிண்ட் வசதி ஏற்படுத்தப்பட்ட எத்தனை கோடிகள் தேவைப்படும் என்று கேள்வி எழுந்துள்ளது.*

*ரயில்வே துறையில் மூத்த குடிமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த கட்டணச் சலுகை நிறுத்தப்பட்டு விட்டது. 2022-23 நிதியாண்டில் மட்டும் மூத்த குடிமக்களுக்கான கட்டணச்சலுகை இல்லாததால், ரயில்வே துறைக்கு 2 ஆயிரத்து 242 கோடி ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது. ஆனால்,*

*மக்களுக்கான சலுகைகளை பறித்துவிட்டு, மக்களின் வரிப்பணத்தை மோடி அரசு சுய விளம்பரங்களுக்கு பயன்படுத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ரயில் நிலையங்களில் பிரதமர் மோடியின் செல்ஃபி பாய்ண்டுகள் அமைக்கப்படுவது, மக்களின் வரிப் பணத்தை முற்றிலும் வீணடிக்கும் செயல் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.*

*மாநிலங்களுக்கான வறட்சி மற்றும் வெள்ள நிவாரணம் வழங்கவில்லை, எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கான MGNREGA நிதியும் நிலுவையில் உள்ளது,*

*ஆனால் மலிவான தேர்தல் விளம்பரங்களுக்கான மக்களின் வரிப்பணத்தை மோடி அரசு தாராளமாக செலவு செய்வதாக கார்கே உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் விமர்சித்துள்ளனர்.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28-12-2023

# ஊழலைப் பற்றி பேசலாமா ? - 1

நாடும் நாட்டு மக்களும் தன்னையும் தனது காலத்து அ.தி.மு.க. அமைச்சர்களையும் பற்றி மறந்திருப்பார்கள் என்ற நினைப்பில் எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமி பேசி இருக்கிறார். அவரெல்லாம் ஊழலைப் பற்றி பேசலாமா? அவரது ஆட்சிக் கால ஊழலைப் பற்றி பேசுவோமா?

**பழனிசாமியின் தலைவி ஜெயலலிதாவுக்கு ஊழல் வழக்கில் நான்கு ஆண்டு சிறைத் தண்டனையும், 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அவர்கள் ஜெயலலிதா,சசி கலா, இளவரசி, சுதாகரன் ஆகிய நான்கு பேருக்கும் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார். 'ஜெயலலிதா செய்தது ஊழல் மட்டுமல்ல, மன்னிக்க முடியாத அரசியல் சட்டப் படுகொலை' என்று உச்சநீதி மன்ற நீதி யரசர்கள் தங்கள் தீர்ப்பில் சொன்னார்கள். "குற்றவாளிகள் அனைவரும் ஒரு கூட்டமாக முதல் குற்றவாளி ஜெயலலிதா வீட்டில் வசித்து வந்துள்ள னர். சேர்ந்து வாழ்வதற்காகவோ, அல்லது மனிதாபிமான அடிப்படையிலோ ஜெயலலிதா பிற குற்றவாளிகளை தன் வீட்டில் தங்க வைக்கவில்லை. மாற்றாக ஜெயலலிதா சேர்த்துக் குவித்த சொத்துக்களை அவர்கள் பெய ரில் வைத்துக் கொள்ளவே சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் ஜெய லலிதா வீட்டில் தங்க வைக்கப்பட்டிருந்தனர் என்று சாட்சியங்கள் அடிப்படை யிலும் சூழ்நிலை அடிப்படையிலும் அய்யமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று உச்சநீதிமன்ற நீதியரசர்கள் எழுதி இருந்தார்கள். ஊழல் வழக்கில் தண்டனை பெற்று இரண்டு முறை முதலமைச்சர் பதவியில் இருந்து விலகிய வர் ஜெயலலிதாவே.** முதலமைச்சராக இருந்தபோதே பதவி விலகி சிறைக்குப் போனவர் ஜெயலலிதாவே. இதையெல்லாம் மக்கள் இன்னும் மறக்கவில்லை.

**நான்காண்டு சிறைத் தண்டனை பெற்ற சசிகலா சிறைக்குப் போவதற்கு முன்புதான் - சசிகலாவின் காலை நோக்கி மண்புழுவைப் போல ஊர்ந்து சென்று - முதலமைச்சர் பதவியை பழனிசாமி பெற்றார். அந்த வீடியோவை தமிழ்நாட்டு மக்கள் தங்கள் வாட்ஸ் அப்பில் இன்னும் அழிக்காமல் வைத் துள்ளார்கள்.**

**இதே பழனிசாமி மீது டெண்டர் வழக்குப் பாய்ந்தது. உடனடியாக உச்சநீ திமன்றம் போய் தடை வாங்கினார். அதனால்தான் முதலமைச்சர் பதவியில் தொடர்ந்து நீடித்தார். "உங்கள் மீது ஊழல் புகார் சொல்லப்படுகிறதே?" என்று நிருபர்கள் டெல்லியில் வைத்து அவரிடம் கேட்டார்கள். "யார் மீது தான் ஊழல் புகார் இல்லை" என்றார் பழனிசாமி.**

தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைப் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட டெண்டர் ஒப்பந்தத்தில் சுமார் 4,800 கோடி ரூபாய் முறை கேடு நடைபெற்றதாகவும் இதுகுறித்து பழனிசாமி மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 2018 ஆம் ஆண்டே வழக்கு தாக்கல் செய்தார்.

ஒட்டன்சத்திரம், தாராபுரம், அவினாசிபாளையம் ஆகிய நான்கு வழிச் சாலைக்கான திட்ட மதிப்பீடு என்பது ரூ.713 கோடியாக உள்ள நிலையில் அந்தத் திட்டத்திற்கான நிதி ரூ.1,515 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இந் தப் பணிக்கான ஒப்பந்தம் பழனிசாமி உறவினர் ராமலிங்கம் என்பவ ருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டது. திரு நெல்வேலி, செங்கோட்டை, கொல்லம் நான்கு வழிச்சாலையை விரிவுபடுத்தி, பலப்படுத்தும் 720 கோடி ரூபாய்க்கான ஒப்பந்தம் வெங்கடாஜலபதி அன்ட் கோ என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஆர்.எஸ். பாரதி கூறியிருந்தார்.

பாலாஜி டோல்வேஸ் நிறுவனத்தில் சேகர்ரெட்டி, நாகராஜன், சுப்ரமணியம் ஆகிய மூவரும் பங்குதாரர்களாக இருக்கிறார்கள். இந்த நிறுவனத்திற்கு நெடுஞ்சாலைத் துறையின் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள மதுரை ரிங் ரோடு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. வண்டலூர் முதல் வாலாஜா வரையுள்ள நான்கு வழிச் சாலையை ஆறு வழிச் சாலையாக மாற்றும் 200 கோடி ரூபாய் மதிப்புள்ள நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்தம் எஸ்.பி.கே. அன்ட் கோ நிறுவனத்திற்கு அளிக்கப் பட்டுள்ளது. திருவள்ளூர், கிருஷ்ணகிரி, பொள்ளாச்சி, விருதுநகர், ராமநாதபுரம் கோட்டங்களின் கீழ் வரும் நெடுஞ்சாலைத்துறை சாலைகள் கட்டுமான மற்றும் பராமரிப் புப் பணிகளை மேற்கொள்ள 5 வருடங்களுக்கான 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தம் வெங்கடாஜலபதி அன்ட் கோவிற்கு கொடுக்கப்பட் டுள்ளதாகவும் உயர்நீதிமன்ற விசாரணையின்போது ஆர்.எஸ்.பாரதி ஆதாரங்களுடன் தெரிவித்தார்.

**தனது உறவினர்களுக்கே பெரும்பாலான ஒப்பந்தங்களைக் கொடுத்தார் என்பதே முக்கியமான குற்றச்சாட்டு. இதன் மூலம் பழனிச்சாமி, தனது நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் பதவியையும், முதலமைச்சர் பதவியையும் தவறாகப் பயன்படுத்தியுள்ளார் என ஆர்.எஸ்.பாரதி மனுவில் தெரிவித்து இருந்தார்.**

வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி 2018 அக்டோபர் மாதம் உத்தரவிட்டது. சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து பழனிசாமி தரப்பில் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் சி.பி.ஐ. விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தது. அந்த வழக்கு அப்படியே கிடந்தது.

ஆட்சி மாறியது, காட்சியும் மாறியது. தமிழக அரசு தரப்பில் வழக்கை விரைந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா அமர்வில் தமிழ்நாடு அரசு சார்பில் முறையிடப் பட்டது. "இவ்வழக்கு கடந்த நான்கு ஆண்டு காலமாக உச்சநீதிமன்றத் தின் விசாரணைக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கின் விசாரணை எவ் வித முன்னேற்றமும் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வழக்கை உச்சநீதிமன்றம் விரைந்து விசாரிக்க வேண்டும்" என முறை யிட்டது. இதனை ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்றத்தின் தலைமை நீதிபதி என்.வி.ரமணா விரைந்து விசாரிக்க உத்தரவிட்டார். அதன்படி, சென்னை உயர்நீதி மன்றமே விசாரிக்கலாம் என்று உத்தரவிட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், இந்த வழக்கு மீண்டும் வேகம் எடுத்தது.

**- தொடரும்**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ், வேளாண் பொறியியல் இயந்திரங்கள் வழங்குதல், சூரியமின் சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் அரியலூர் மாவட்ட இருளர் இன பழங்குடியின மக்களுக்கு முந்திரி சேகரம் செய்து கொள்ளும் உரிமைக்கான ஆணைகள் வழங்குதல், என மொத்தம் 1 கோடி ரூபாயில், 5 பழங்குடியின சங்கங்களுக்கு ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜனவரி 19 முதல் 31, 2024 வரை தமிழ்நாட்டின் நான்கு மாவட்டங்களில் நடத்தப்படும் #KheloIndia இளைஞர் விளையாட்டு 2023க்கான ஆயத்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி. விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டின் நிலை மற்றும் இதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பிற ஏற்பாடுகளை மதிப்பாய்வு செய்தார். உடன் விளையாட்டுத்துறை உயர் அதிகாரிகள் உள்ளனர்.

### எண்ணூரில் வாயுக் கசிவினால்

## பாதிக்கப்பட்ட 42 பேரும் நலமுடன் உள்ளனர்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*சென்னை, டிச. 28 -*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சென்னை எண்ணூரில் ஏற்பட்ட வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார். பின்னர் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

நேற்று இரவு தொழிற்சாலையில் இருந்து கேஸ் கசிவு ஏற்பட்டு அக்கம் பக்கத்தில் குடியிருப்புகளில் உள்ள பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சு திணறல் போன்ற உடல் உபாதைகள் ஏற்பட்டது. உடனடியாக பொது மக்கள் சுகாதாரத்துறையை தொடர்பு கொண்டதன் அடிப்படையில் 16 ஆம்புலன்ஸ்கள் மூலம் பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுத்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 6 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர், அவர்களை நேரடியாக சந்தித்து சிகிச்சை பற்றி கேட்டறிந்தேன். எல்லோரும் நலமுடன் இருக்கிறார்கள். அதே போல் ஆகாஷ் மருத்துவமனையில் நேற்று இரவு முதல் பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டவர்களை அனுமதித்துள்ளனர். அவர்களுக்கு தேவையான சிகிச்சை பற்றி கேட்டு அறிந்தேன்.

மேலும் நானும், சுதர்சனம் எம்.எல்.ஏ., சங்கர் எம்.



எல்.ஏ., மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஆகியோர் நேரடியாக சென்று சந்தித்து நலம் விசாரித்தும், அவர்களுக்கான கண் எரிச்சல்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தேன். அதோடுமட்டுமல்லாமல் பெருநகர சென்னை மாநகராட்சியும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையும் ஒருங்கிணைந்து மருத்துவ முகாமினை பெரிய குப்பம் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் முகாமினை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 36 பேர் ஆகாஷ் மருத்துவமனையிலும், அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 6 பேர், என மொத்தம் 42 பேருமே நலமுடன் இருக்கிறார்கள்.

இன்னும் சில மணி நேரத்தில் வீடுகளுக்கு திரும்புவார்கள். இது சம்பந்தமாக மாசு கட்டுப்பாடு வாரியத்தில் உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழிற்சாலையை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். காவல்துறை இரவு நேரமாக மீட்பு பணிகள் நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக செய்திருக்கிறார்கள். யாருக்கும் எந்த வித பெரிய பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாத்து இருக்கிறார்கள். ஐ.சி.யு.வில் யாரும் இல்லை, தீவிர பாதிப்புகள் எதுவும் இல்லை. சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் உள்ள 3 குழந்தைகள் காலையில் காலை உணவு சாப்பிட்டிருக்கிறார்கள். எல்லோரும் நலமுடன் இருக்கிறார்கள்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களின் மருத்துவ செலவு முழுவதும் அரசே ஏற்றுக் கொள்ளும். ஒரு ரூபாய் கூட பொதுமக்களிடமிருந்து வாங்க கூடாது என்று மருத்துவ நிர்வாகத்திடம் கூறியுள்ளோம். தொழிற்சாலை சம்பந்தமாக அந்த துறை அமைச்சர் பேசி ஆய்வு மேற்கொண்டு இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பார்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜன. 8 அன்று ஒன்றிய அரசைக் கண்டித்து

## பேரிடர் நிவாரண நிதியை முழுமையாக வழங்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

### மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அறிவிப்பு!

*சென்னை, டிச. 28 -*

தமிழ்நாடு முழுவதும் முழுமையாக பேரிடர் நிவாரண நிதி வழங்கக் கோரியும், ஒன்றிய அரசைக் கண்டித்தும் ஆர்ப்பாட்டம்' 'இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஜன 8 - அன்று நடைபெறுகிறது என்று அக்கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

டிசம்பர் 3, 4 தேதிகளில் மிக்ஜாம் புயல் காரணமாக பெய்த பெருமழையால் தலைநகர் சென்னையும் திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்



டங்களும் கடுமையாக பாதிக்கப்பட்டன. மக்களின் இயல்பு வாழ்க்கை நிலைகுலைந்து போனது. வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் சிக்கி தவித்த மக்களை பாதுகாக்கவும், மீட்டு மறுவாழ்வு தொடங்கவும் தமிழ்நாடு அரசு போர்க் கால வேகத்தில் செயல்பட்டது பேரிடர் நிவாரண உதவிகளுக்கு நிதியுதவி வழங்க வேண்டிய ஒன்றிய அரசு மாற்றாந்தாய் போக்கில் அலட்சியம் காட்டி வருகிறது.

இந்த நிலையில் டிசம்பர் 18 ஆம் தேதி தென் தமிழ்நாட்டில் பெய்த பெருமழையில் தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாநகர தெருக்களிலும், வீடுகளிலும் வெள்ளம் புகுந்து தேங்கியதால் மக்கள் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 2 கோடி மக்கள் வாழும் பகுதி பாதிக்கப்பட்டிருப்பதை கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு தேசிய பேரிடராக அறிவித்து, தமிழ்நாடு முதலமைச்சர் கோரியுள்ள ரூபாய் 21 ஆயிரத்து 692 கோடியை முழுமையாக உடனடியாக வழங்க வேண்டும்.

ஆனால் ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தமிழ்நாடு அரசின் மீதும், அமைச்சர்கள் மீதும் அவதூறு பேசி, தமிழ்நாட்டு மக்களை அவமதிக்கும் மலிவான அரசியலில் ஈடுபட்டு வருவதை வெந்த புண்ணில் வேல் கொண்டு தாக்குவதாக அமைந்துள்ளது.

மத்தியக் குழு விரிவாக பயணம் செய்து, வெள்ளப் பாதிப்புகளை ஆய்வு செய்துள்ளது. ஒன்றிய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் பார்வையிட்டு சென்றுள்ளார். தேவையான உதவிகளை செய்வதாக பிரதமர் மோடி, முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார். இவ்வளவுக்கும் பிறகு இதுவரை தமிழகம் சந்தித்த இயற்கை சீற்றப் பேரழிவை எதிர்கொள்ள பேரிடர் நிவாரண நிதி வழங்காத ஒன்றிய அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும், தமிழ்நாடு அரசு கோரியுள்ள பேரிடர் கால உதவி நிதியை முழுமையாக வழங்கவும் வலியுறுத்தி 08.01.2024 திங்கள் கிழமை தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இவ்வாறு இரா.முத்தரசன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நமது விழிப்புணர்வுப் பயணத்தை தொய்வின்றித் தொடருவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

● தாட்கோவாவில் செயல்படுத்தப்படுகிற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மூலமாக கடந்த நிதியாண்டில் மட்டும் 10 ஆயிரத்து 466 பயனாளிகளுக்கு 152 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

● தொழில் முனைவோருக்கான சமூகநீதியை உறுதிப்படுத்துற நோக்கில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதியம் 2022-23ஆம் நிதியாண்டில் 30 கோடி ரூபாய் நிதியுடன் தொடங்கப்பட்டிருக்கிறது.

**மகளிரால் நிர்வகிக்கப்படும் 13 நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவை!**

● கடந்த ஆண்டு 21 புத்தொழில் நிறுவனங்கள் 28 கோடியே 10 லட்சம் ரூபாய் பயன்பெற்ற நிலையில் இந்தத் திட்டத்தின் சிறப்பான வெற்றியை கருத்தில் கொண்டு 2023-24ஆம் நிதியாண்டுக்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் இந்த நிதியாண்டில் 5 பழங்குடியினர் மற்றும்21ஆதிதிராவிடர்நிறுவனங்கள் என்று மொத்தம் 26 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. இதில் 13 நிறுவனங்கள் மகளிரால் நிர்வகிக்கப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

● ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர் உற்பத்தி, வணிகம், மற்றும் சேவை சார்ந்த புதிய தொழில் தொடங்க, திட்டத்தின் மொத்த மதிப்பீட்டில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் ஒன்றரை கோடி ரூபாய் வரை கடன் பெற உதவுகிற 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' நம்முடைய அரசால் அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

● இந்தத் திட்டத்துக்காக நடப்பு நிதியாண்டில் 100 கோடி ரூபாய் நிதியை தமிழ்நாடு அரசு ஒதுக்கியிருக்கிறது.

● அரியலூர் மாவட்டத்தில் இருக்கின்ற 16 கிராமங்களில் வாழ்கிற மக்களில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் தொழில் முனைவோராக மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

**வன உரிமை பாதுகாப்பு தளவாடப் பொருள் உற்பத்தி!**

● ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் இருக்கின்ற பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிற வகையில் உன்னிக்குச்சி மூலமாக 1 கோடியே 36 லட்சம் ரூபாய் செலவில் தளவாடப் பொருட்கள் உற்பத்திக்கான தொழிற்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

**சமூக நிலைகளில் உயர்த்துகின்ற அனைத்து முயற்சிகளையும் நம்முடைய அரசு கவனத்துடன் மேற்கொண்டு வருகிறது. இதன் தன்னம்பிக்கை சுயமரியாதை அதிகாரத்தில் பங்கு போன்ற நிலைகளில் ஆதிதிராவிட பட்டியலின மக்களை உயர்த்துகின்ற பணிகளை அரசு செய்துகொண்டு வருகிறது.**

● காடுகளில் வாழ்கின்ற பழங்குடியினரின் வன உரிமையை பாதுகாக்க, 11 ஆயிரத்து 601 தனிநபர் வன உரிமைகளும், 691 சமூக வன உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கிறது.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், பயனாளி வெங்கடேசனுக்கு 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய வங்கிக் கடனுதவி ஆணையினை வழங்கினார்.

● தூய்மைப் பணியாளர் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு, 87 ஆயிரத்து 327 உறுப்பினர்களுக்கு 10 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

● புதிரை வண்ணார் நல வாரியம் திருத்தி அமைக்கப்பட்டு, அந்த மக்களுடைய வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள 2023-2024ஆம் நிதியாண்டில் 10 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

● பழங்குடியினர் ஆன்றோர் மன்றம், பழங்குடியினர் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியம் ஆகியவை திருத்தி அமைக்கப்பட்டு செயல்படத் துவங்கியிருக்கிறது.

சமூக நிலைகளில் உயர்த்துகின்ற அனைத்து முயற்சிகளையும் நம்முடைய அரசு கவனத்துடன் மேற்கொண்டு வருகிறது. இதன் தன்னம்பிக்கை சுயமரியாதை அதிகாரத்தில் பங்கு போன்ற நிலைகளில் ஆதிதிராவிட பட்டியலின மக்களை உயர்த்துகின்ற பணிகளை அரசு செய்துகொண்டு வருகிறது.

**சமூக, சிந்தனை வளர்ச்சி, மக்கள் மனதில் உருவாக வேண்டும்!**

இப்படி தொடர்ச்சியான பணிகள் மூலமாகதான் சுயமரியாதைச் சமதர்ம சமுதாயத்தை நாம் உருவாக்கியாக வேண்டும். நிதி ஒதுக்கீடுகளால், தொலைநோக்குப் பார்வையால், கண்காணிப்பால், மற்ற வளர்ச்சிகளை நாம் எட்டிடலாம். ஆனால், சமூக வளர்ச்சியும், சிந்தனை வளர்ச்சியும் மக்கள் மனங்களில் உருவாக வேண்டும். மக்களுடைய மனதளவில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

இது அவ்வளவு சீக்கிரமாக ஏற்படாது என்பதும் உண்மைதான். அதே நேரத்தில் சமூக வளர்ச்சி சிந்தனை வளர்ச்சியை உருவாக்குகின்ற நம்முடைய விழிப்புணர்வு பயணம் என்பது, தொய்வில்லாமல் தொடரவேண்டும். அந்தப் பணிகளையும் நம்முடைய திராவிட மாடல் அரசு செய்துகொண்டு வருகிறது.

அண்ணல் அம்பேத்கரின் கனவான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் நிறைந்த, சமூகநீதியின் அடிப்படையிலான ஒரு சமத்துவ சமுதாயமாக தமிழ்நாட்டை உருமாற்றும் வகையில் நம்முடைய விழிப்புணர்வுப் பயணத்தை தொய்வின்றித் தொடருவோம்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### பிரதமர் மோடியின் கிறிஸ்துமஸ் தின பேச்சு

## தேர்தல் கால தற்காலிக ஞானோதயம்!

### 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம்!


சென்னை, டிச. 28-

சொல் ஒன்று செயல் ஒன்று என்பது தான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பாலபாடம். அந்த பள்ளியில் பயின்ற பிரதமர் மோடியிடன் கிறிஸ்துமஸ் தின பேச்சு தேர்தல் காலத்தில் ஏற்பட்டுள்ள தற்காலிக நானோதயம் என்று 'தீக்கதிர்' நாளேடு 27.12.2023 அன்று தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

சமூகத்துக்கு வழிகாட்டுவதிலும், சேவையாற்றுவதிலும் கிறிஸ்தவ சமூகத்தினரின் பங்களிப்பை இந்தியா பெருமையுடன் அங்கீகரிக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி கிறிஸ்துமஸ் விழாவில் பேசியுள்ளார். இது அவருக்கு ஏற்பட்டுள்ள தேர்தல் கால தற்காலிக 'ஞானோதயம்' ஆகும்.

நரேந்திர மோடி தலைமையிலான கடந்த பத்தாண்டு கால ஆட்சியில் சிறுபான்மை, இஸ்லாமிய, கிறிஸ்துவ மக்களுக்கு இழைக்கப் பட்ட பாரபட்சமும், அநீதியும் கொஞ்சம் நஞ்சமல்ல. கல்வி மற்றும் சுகாதார துறையில் கிறிஸ்தவர்கள் பெருமைப்படத்தக்க பங்களிப்பை செய்துள்ளனர் என இப்போது பிரதமர் பசப்புகிறார். ஆனால் மதமாற்றம் செய்வதற்காகவே அவர்கள் இந்த சேவையை செய்வதாக நாக்கூசாமல் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பரிவாரம் இப்போதும் அவதூறு செய்து வருகிறது.


தீக்கதிர்
பிரதமர் மோடியின் 'பொய்' பிரசங்கம்

இந்துத்துவா பரிவாரத்தினால் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கிறிஸ்தவ பாதிரியார் கிரஹாம் ஸ்டெயின் மற்றும் அவரது இரண்டு மகன்கள் உயிருடன் எரித்து கொலை செய்யப்பட்டனர். அந்த கொலையாளிகளை ஆர்.எஸ்.எஸ். பரிவாரம் பாதுகாத்தது. பழங்குடி மக்களுக்கு சேவை செய்த ஸ்டேன் சுவாமி பாதிரியாரை பொய் வழக்கில் சிறையில் தள்ளி பிணை கூட கிடைக்காமல் அவர் சிறையிலேயே மாண்டார். இதுதான் கிறிஸ்தவ சமூகத்தின் பங்களிப்பை அங்கீகரிக்கும் லட்சணமா?

வடகிழக்கு மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் அதிகமாக வாழ்கின்றனர். பல வடகிழக்கு மாநி லங்களில் பா.ஜ.க.ஆட்சி நடைபெற்று வருகிறது. கிறிஸ்த வர்கள் மத்தியில் பா.ஜ.க.வுக்கு வரவேற்பு அதிகரித்து வருகிறது என்றும் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

தேர்தலுக்கு முன்பு மணிப்பூரில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சிதான் நடைபெற்று வந்தது. கிறிஸ்தவ மக்களான குக்கி மக்கள் மீது முதல்வரின் ஆதரவோடு மதவெறி, இனவெறி தாக்குதல் தொடுக்கப்பட்டது. இரண்டு சகோதரி கள் நிர்வாணப்படுத்த ப்பட்டு வீதியில் இழுத்து வரப்பட்டதோடு, கும்பல் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்டனர். இப போதும் கூட அந்த மாநிலத்தில் கிறிஸ்தவ மக்களுக்கு எதிரான தாக்குதல் தொடர்கிறது. அந்த மாநிலத்தை எட்டிப் பார்க்கக்கூட மறுத்த பிரதமர் இப்படிப் பேசுவது அதிர்ச்சியளிக்கிறது. ஆனால் இவ்வாறு பேசுவது அவருக்கு ஒன்றும் புதிது அல்ல.

சொல் ஒன்று, செயல் வேறு என்பதுதான் ஆர்எஸ்எஸ் அமைப்பின் பாலபாடம். அந்த பள்ளியில் பயின்ற மோடி இப்படித்தான் பேசுவார். அவரது கிறிஸ்துமஸ் தின பேச்சு என்பது எந்தளவுக்கு பொய்மையானது என்பதை கிறிஸ்துவ மக்கள் நன்கு அறிவார்கள். இவரது வார்த்தைகளில் இருந்து அல்ல, தாங்கள் படும் வாதைகளிலிருந்தே அவர்கள் முடிவெடுப் பார்கள்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

---

## மின்சார பாதுகாப்பு : பொது மக்களுக்கு அன்பான வேண்டுகோள்!

சென்னை, டிச. 28 -

கடந்த வாரம் தென் மாவட்டங்களில் பெய்த வரலாறு காணாத கன மழை காரணமாக தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட மின்சார பாதிப்பினை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் போர்கால அடிப்படையில், பணிகளை துரிதமாக மேற்கொண்டு தற்போது அனைத்து பகுதிகளுக்கும் சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், கனமழை காரணமாக மின் வயர்கள் மற்றும் மின் சாதனங்கள் பழுது ஏற்பட்டிருக்க அதிகப்படியான வாய்ப்புகள் உள்ளபடியால். பொதுமக்கள் கீழ்கண்ட பாதுகாப்பு வழிமுறைகளை கடைபிடிக்கு மாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. வீட்டில் மின் சுவிட்சுகளை 'ஆன்' செய்யும் போது பாதுகாப்புக்காக காலில் செருப்பு அணிந்து கொள்ளவும்.

2. நீரில் நனைந்த பேன், லைட் உட்பட எதையும் மின்சாரம் வந்தவுடன் இயக்க வேண்டாம்.

3. வீட்டின் உள்புற சுவர் ஈரமாக இருந்தால் மின்சார சுவிட்சுகள் எதையும் இயக்கக் கூடாது. 4.மின்சார மீட்டர் பொருத்தப்பட்டுள்ள பகுதி ஈரமாக இருந்தால் உபயோகிக்கக்கூடாது.

5. வீட்டில் மின்சாரம் இல்லையென்றால் அருகில் இருந்து தாங்களாகவே ஒயர் மூலம் மின்சாரம் எடுத்துவரக்கூடாது.

6. மின் கம்பி அறுந்து தொங்கிக் கொண்டிருந்தாலோ. மின் கம்பங்கள் உடைந்திருந்தாலோ, சாய்ந்திருந்தாலோ உடனடியாக மாநில மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தை 94987 94987 என்ற அலைபேசி எண் மூலம் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கவும்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் உதகை அரசு படகு இல்லத்தில் சுற்றுலா பயணிகளுக்கு பயணிகளின் வசதிகள் குறித்தும் அதன் மேம்பாடு குறித்தும் ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி மு.அருணா, அரசு அதிகாரிகள்,மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.

---

### காஞ்சிபுரம் மாவட்டம் – பரந்தூர் கிரீன்ஃபீல்ட் விமான நிலையம்:

## விண்வெளி பாதுகாப்பு தாக்கம் குறித்து தமிழ்நாடு அரசுக்கு ஒன்றிய அரசு தெரிவித்ததா?

### மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி

புதுடெல்லி, டிச. 28 -

ஏப்ரல் 11, 2023 தேதியிட்ட பாதுகாப்பு அமைச்சக கடிதத்தில், பரந்தூரில் முன்மொழியப்பட்ட கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மறுபரிசீலனை செய்ய அறிவுறுத்தியுள்ளதா? ஏனெனில் இது தாம்பரம் இந்திய விமானப்படை மற்றும் அரக்கோணத்திலுள்ள இந்திய கடற்படைக்கும் நெருக்கமாக இருப்பதால், இது இராணுவ நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடும் மற்றும் அனைத்து பயனர்களுக்கும் பாதகமான விண்வெளி பாதுகாப்பு தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும்; அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இது குறித்த ஒன்றிய அரசாங்கத்தின் நிலைப்பட்டினை தமிழக அரசுக்கும், டிட்கோ நிறு வனத்திற்கும் தெரிவித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் குறித்து மாநிலங்களவையில் உறுப்பினர் இரா. கிரிராஜன் எழுத்து மூலம் எழுப்பிய கேள்விக்கு சிவில் விமானப் போக்கு வரத்துத் துறை இணையமைச்சர் ஜெனரல் டாக்டர் வி. கே.சிங் அளித்த பதில் வருமாறு.

11-04-2023 தேதியிட்ட பாதுகாப்பு அமைச்சக அறிக்கையில், இந்திய விமானப்படை தாம்பரம், இந்திய கடற்படை அரக்கோணம் மற்றும் சென்னை தேசிய விமான நிலையம் ஆகியவை அருகாமையில் இருப்பதால் பரந்தூரில் முன்மொழியப்பட்ட கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மறுபரிசீலனை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சகம் அறிவுறுத்தியது.

11.04.2023 தேதியிட்ட பாதுகாப்புத் துறையின் கருத்துகள் 21.04.2023 அன்று தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்கும்



(TIDCO) மற்றும் விமான நிலைய ஆணையத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, டிட்கோ மற்றும் இந்திய விமான நிலைய ஆணையத்தின் கருத்துகள், மத்திய உள்துறை அமைச்சகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன.

25.10.2023 தேதியிட்ட மத்திய உள்துறை அமைச்சக கடிதத்தில், தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் கிரீன்பீல்டு விமான நிலையம் அமைப்பதற்கான இட அனுமதியை நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்க ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து தகவல் 08.11.2023 அன்று தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கு (TIDCO) தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.




காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம் உத்திரமேரூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் பள்ளிகளில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசின் விலையில்லா மிதிவண்டிகளை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர் க. செல்வம் எம்.பி. , உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர் கெ.ஞானசேகரன், இரா.நாகன், , என்.எஸ். பாரிவள்ளல், , பி.சசிகுமார்,; இளமதி கோவிந்தராஜ், சுகுனா சுந்தரராஜன், தயாளன்(ஏ) ருத்திரகோட்டி, கெங்கன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் யுவராஜ் மற்றும் உத்திரமேரூர் ஒன்றிய நிர்வாகிகள்,மாவட்ட ,ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழக தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



வடசென்னை எண்ணூர் இ.ஐ.டி.பியாரி (கோரமண்டல்) தொழிற்சாலையில் இருந்து எதிர்பாராமல் அமோனியம் வாயு குழாயில் விரிசல் ஏற்பட்டு அமோனியா வெளியேறியதால் அப்பகுதியை சுற்றி உள்ள தாளங்குப்பம், நெட்டுக் குப்பம். முகத்துவார குப்பம். பெரியக் குப்பம். சின்ன குப்பம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களுக்கு மூச்சு தினறல், மயக்கம் ஏற்ப்பட்டுள்ளது, இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்று பாதிப்பு குறித்து கேட்டு அறிந்து மேலும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகாஷ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சென்று பார்வையிட்டு மருத்துவர்களிடம் கழக அயலக அணி தலைவரும் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர். கலாநிதி வீராசாமி சிகிச்சை குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் மண்டலக்குழு தலைவர் மற்றும் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி. மு.தனியரசு மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# நீதியின் தூக்கு மேடையில் புதிய சட்டங்கள் நிறைவேற்றம்!

இந்தியஒன்றிய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு 26ம் நாள் ஜனவரித்திங்கள் 1950 ஆம் ஆண்டு அமலாக்கம் செய்யப்பட்ட நாள் தொடங்கி ஜனநாயக ஆட்சிமுறையை தொடர்ந்து இந்திய மக்கள் பின்பற்றி வருகிறார்கள் என்பதும், இடையே ஜனநாயகத்திற்கு சோதனை ஏற்பட்ட காலகட்டத்தில் கூட, தேசியத் தலைவர்களும் மக்களும் ஒன்றிணைந்து இந்திய நாட்டின் ஜனநாயக ஆட்சி முறையை சிறையிலிருந்து காப்பாற்றி, மீண்டும் ஜனநாயக ஆட்சிமுறையை நிலைநாட்டினார்கள் என்பதும், உலகிலேயே சீனத்திற்கு நிகரான மக்கள் தொகை கொண்ட ஒரு நாடு ஜனநாயக ஆட்சி முறையை பின்பற்றுகிறது என்றால் அது இந்தியாதான் என்பதும் இந்தியாவிற்கு உலக அரங்கில் பெருமைசேர்க்கும் சிறப்பம்சமாக கருதி பாராட்டுகளை தொடர்ந்து பெற்றுவருகிறது.

இத்தகைய பாராட்டுக்குரிய இந்திய ஜனநாயகம், பாராளுமன்ற ஆட்சிமுறையை ஏற்றுக் கொண்ட அரசியல் அமைப்பாகும்: (Parliamentary Democracy) பாராளுமன்றம் என்பது மக்கள் பிரதிநிதித்துவ சபையாகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்பிரதிநிதிகள் ஒன்றுகூடி மக்களுக்கான அனைத்து சட்டங்களையும் மற்றைய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

**பொன்.முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்.

அது மட்டுமல்ல ஜனநாயகத்தின் இதயம் எனக் கருதப்படுவது, மத்தியில் நாடாளுமன்றமும், மாநிலங்களில் சட்டமன்றங்களுமாகும். ஆனால் இன்று ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் உள்ள பாரதிய ஜனதாக்கட்சி இந்த உயர்ந்த உயிரோட்டமான ஜனநாயகக் கோட்பாடுகளைப் பின்பற்றுகிறதா என்பதுதான் இன்று உலகளாவிய இந்திய மக்களின் விவாதப்பொருளாக மாறியுள்ளது. நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடர் திட்டமிடப்பட்ட காலக்கெடுவிற்கு ஒரு நாள் முன்பாகவே முடித்து வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நாடாளுமன்றம் நடந்து கொண்டிருக்கும் பொழுது, இருவர் நாடாளுமன்றப் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து நாடாளுமன்ற வளாகத்தில் குதித்து கால்களில் மறைத்து வைத்திருந்த கலர்ப்புகைக் குண்டுகளை வெடிக்கச்செய்து, சர்வாதிகாரம் ஒழிக என முழக்கமிட்டுள்ளார்கள். பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் நாடாளுமன்ற பார்வையாளர்கள் வளாகத்தில் அமர்ந்து நாடாளுமன்ற நடவடிக்கைகளை பார்ப்பதற்கு அனுமதிச்சீட்டு வழங்கியவர் பாரதீய ஜனதாக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்!! இருவர் நாடாளுமன்ற வளாகத்தில் குதித்து புகையைக்கிளப்பி கண்டனக்குரல் எழுப்பிய அதேகாலக்கட்டத்தில், நாடாளுமன்றத்திற்கு வெளியே பெண் உள்ளிட்ட அதே குழுவைச் சர்ந்தவர்கள் ஒன்றிய ஆட்சிக்கு எதிராக கண்டன முழக்கங்கள் எழுப்பியிருக்கிறார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்தும் நாடாளுமன்ற கட்டுக்காவலை மீறித்தான் அரங்கேறியுள்ளன. பின்னர் விழிப்புற்ற காவலர்களால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களது நோக்கம் எதுவாக இருப்பினும், அவர்களது நடவடிக்கை என்பது கடும் கண்டனத்திற்குரியது என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. ஆனால் இந்த நிகழ்விற்குப்பின் நடைபெற்ற தொடர் நிகழ்சிகள் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் கேலிப்பொருளாக்கி விட்டதால்தான் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரும் கருதுவதோடு ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளனர். நடந்துவிட்ட அந்த திட்டமிட்ட நிகழ்சிகள் குறித்து, நாட்டின் பிரதம அமைச்சரோ அல்லது உள்துறை அமைச்சரோ நாடாளுமன்றத்தில் விளக்க அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும், மேலும் அது பற்றிய விவாதம் வேண்டுமெனக் கோரிக்கைவிடுத்து, கண்டனங்களைத் தெரிவித்த 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் என்பது அவைத்தலைவர் சிலநேரங்களில், நாடாளுமன்ற நடவடிக்கைகள், தடையின்றி நடைபெற வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்தின் காரணமாக மேற்கண்ட நடவடிக்கையாகக் கருத வாய்ப்புண்டு. ஆனால் அத்தகைய நடவடிக்கைகள் ஓர் தற்காலிகமான நடவடிக்கையாக இருக்குமே அல்லாமல், ஆளுங்கட்சியின் அரசியல் நோக்கங்களை தடையின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கான திட்டமிட்ட ஏற்பாடாக இருக்காது, இருக்கவும் கூடாது. இந்த நாடாளுமன்ற கூட்டத்தொடரில் இடைநீக்கம் செய்யப்பட்ட 146 உறுப்பினர்களின் இடைநீக்க ஆணையை ரத்துசெய்யாமலேயே, பல்வேறு முக்கியமான மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் விவாதமின்றி சட்டங்களாக நிறைவேற்றி வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதுதான் இன்று மக்கள் குழப்பத்திற்கும், ஆழ்ந்த கவலைக்கும் காரணிகளாக உள்ளது. ஜனநாயக ஆட்சிமுறையைக் கேள்விக்குறியாக்கி நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் குற்றவியல் நடைமுறைச்சட்டம் (Criminal Procedure Code) இந்திய தண்டனைச்சட்டம் (Indian Penal Code), சாட்சியச்சட்டம் (Evidence Act) ஆகியவைகளாகும். இந்த மூன்று சட்டங்களும் மசோதாக்கள் இந்தி மொழியில் தலைப்புகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல: இந்த மசோதாக்களின் முக்கியத்துவமும் கருதி, இந்த மூன்று சட்ட மசோதாக்களும் ஏற்கனவே நாடாளுமன்ற நிலைகுழுவிற்கு அனுப்பப்பட்டு நிலைக்குழுவின் ஆய்வு அறிக்கையும், நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்டு, சட்டங்களாக்கப்பட்டுள்ளன.

ஆனால் நாடாளுமன்றத்தில் விவாதிக்கபடவும் இல்லை, விளக்கம் வழங்குவதற்கான சூழ்நிலையும் அங்கு இல்லை. இந்திய நாட்டின் ஓர்வொரு குடிமகனையும் பாதிக்கக்கூடிய அல்லது தொடர்புடைய, நாட்டின் ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கு, சமூக அமைதி ஆகிய மூலதாரமான அம்சங்களை உள்ளடக்கிய சட்டங்கள் விவாதமின்றி நிறைவேற்றபட்டுள்ளது. இது போன்றே வேறுபல சட்ட மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்படி எதிர்கட்சியில் உள்ள 146 உறுப்பினர்களை இடைநீக்கம் செய்து விட்டு,தங்கள் கட்சியின் எண்ணிக்கை பலத்தையே முழுவதும் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு இந்த முறையில் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டால், ஆட்சிக் கட்சியின் எதேச்சதிகாரம் என்றுதான் கருத முடியுமே அல்லாமல் ஜனநாயகமுறையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் என்று எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். ஆம்! ஜனநாயகத்தில் ஓர் சர்வாதிகாரம்!! உண்ணும் உணவுகூட சில நேரங்களில் சில சூழ்நிலைகளில் "நஞ்சாகிவிடும்" அந்த நிலைதான் இன்று இந்திய நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு உருவாகியுள்ளது என்பதை நடுநிலையாளர்களால் மறைக்கவோ மறுக்கவோ இயலாது!! இந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் என்ற தோற்றத்தை மட்டும் கொடுக்கலாமேயல்லாமல், ஜனநாயக ஆட்சிமுறையின் நோக்கங்களை நிறைவு செய்கின்ற முறையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கல்தானா? என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது. மக்களின் அச்சங்களையும், ஆதரவுகளையும், மக்களின் பிரதிநிதிகள் விவாதிக்கின்ற நாட்டின் பெரும்மன்றம்தான் நாடாளுமன்றம். மக்களின் அச்சங்களை அறிந்து கொள்ளாமலேயே ஆதரவை மட்டும் கணக்கிலெடுத்துக் கொண்டு சட்டங்கள் நிறைவேற்றப்படுமானால, அத்தகைய சட்டங்கள் நியாயத்தின் அடிப்படையிலான சட்டங்களாக கருதவியலாது. எண்ணிக்கை பலம் என்பது மாநில சட்டமன்றங்களிலோ அல்லது நாடாளுமன்றங்களிலோ முறையே அந்தந்த மாநில அதிகாரங்களையும் அளித்து மாநிலங்களையும் உள்ளடக்கிய இந்திய ஒன்றியத்தின் அதிகாரங்களையும் பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப கைப்பற்றுவதற்கான அளவுகோல் மட்டும் தான். மாறாக எண்ணிக்கை பலம் ஒன்றே தாங்கள் எண்ணியதையெல்லாம் சட்டமாக்குவதற்கான கருவி என்று கருதிச் செயல்பட்டால், ஜனநாயகத்தில் ஓர் சர்வாதிகாரம் நிச்சயம் உருவாகும், என்பதில் ஐயமில்லை, ஜனநாயக ஆட்சிமுறையில் எதிக்கட்சிகள் என்பது ஆட்சியின் ஓர் அங்கமாகும். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் என்பதை ஆட்சிக்கட்சியில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய அரசியல் சட்டத்தின் முகவுரையில்(Preamble to the Constitution) ஒவ்வொரு குடிமகனுக்கும் சமுக, பொருளாதார, அரசியல் நீதி வழங்கப்படவேண்டுமென்பதை உறுதி செய்துள்ளது (To secure to all it's citizens: Justice : social, economic and political.....Preamble to the Constitution) ஆனால் சமீபத்தில் நடைப்பெற்ற நாடாளுமன்ற கூட்டத்தொடரில் 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்துவிட்டு நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் மக்களின் உணர்வுகளை, மக்கள் பிரதிநிதிகள் மூலம் அறிந்து கொண்டு நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் என்றுகருதவியலுமா என்பதுதான் இன்றைய ஜனநாயக நம்பிக்கையாளர்களின் கேள்வியாகும்? அதுமட்டுமல்ல இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருக்கின்ற சமுக, பொருளாதார, அரசியல் நியதிகள் எதேச்சதிகரமாக மீறப்பட்டுள்ளது என்றுதானே கருத முடியும். இந்த நிகழ்வுகள் தொடருமானால் ஜனநாயகம் உருக்குளைக்கப்படு சர்வாதிகாரம் தலைதூக்க ஆரம்பிக்கும். அமைதியையும், வளர்ச்சியையும் விரும்பும் ஒரு சமுதாயத்திற்கான அடிப்படை நீதிதான்! அந்த நீதியை வெளிப்படுத்துகின்ற கருவிகள் தான் சட்டங்கள். அத்தகைய சட்டங்கள் நாட்டு மக்களின் தேவைக்கு பயன்படாமல் ஆளும் பாரதீய ஜனதாக்கட்சியின் தேவைக்கு பயன்படுமாயின், காலப்போக்கில் அந்தக்கட்ச்சியின் சர்வாதிகாரம் தொடரும், என்பதில் ஐயமில்லை. நாட்டில் ஒரு முதுமொழி வழக்கத்தில் உண்டு அது தான் "புலிவாலைப்பிடித்த நாயரைப் போல்" என்பதாகும், புலிவாலைப்பிடித்தவன் அதனை விட்டு விலகுவது அரிதாகும், அப்படி விலகினால் அதே புலியால் கொடூரமாகத்தாக்கப்படுவான். எனவே சர்வாதிகாரப்பதை என்பது இதே விளைவுகளைத்தான் உருவாக்கும். நாடாளுமன்றத்தில் 146 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்துவிட்டு, முக்கியமான சட்டங்கள் விவாதமின்றி நிறைவேற்றுவ தென்பது முன்னால் உச்சநீதிமன்ற நீதிபதி, சட்ட வல்லுநர், தலைசிறந்த நிர்வாகி நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் "சட்டமும் நீதியும்" என்ற புத்தகத்தில் தெரிவித்திருப்பதைப்போல் "நீதியின் தூக்கு மேடையில், உருவாக்கப்பட்ட சட்டங்கள் நீண்ட காலம் வாழட்டும்" என்று நீதிக்கு வழித்தடம் அமைக்காத சட்டங்கள் என வஞ்சப்புகழ்ச்சியச் சாடியிருப்பார். ("Justice is dead; long live the law" Page No 14 "Law vesus Justice" By Justice V.R. Krishna Iyar) நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் எத்தகையது என்பதற்கு மறைந்த உச்சநீதிமன்ற நீதிபதி வி.ஆர். கிருஷ்ண அய்யரின் கருத்துக்களே உரிய விளக்கமும் விமர்சனமும் ஆகும்!! இன்றைய தினசரியில் (26.12.2023) இந்திய நாட்டின் குடியரசுத்தலைவரே அதற்கு குறுகியகால இடைவெளியில் ஒப்புதல் வழங்கிவிட்டார் என்பது மேலும் நாட்டு மக்களை அதிர்ச்சிக்கு ஆளக்கியுள்ளது!!

●



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை கூட்டரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் ஈ.வெ.ரா. மணியம்மையார், அன்னை தெரசா,டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி அம்மையார்,டாக்டர்.தர்மாம்பாள் அம்மையார் நிதியுதவித்திட்டத்தின் கீழ் 962 பயனாளிகளுக்கும் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 32 பயனாளிகளுக்கும் 8 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் நிதி உதவிகளை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கி திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் மாற்றுத்திறனாளிக்கான கணக்கெடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரச்சாரங்களை வழங்கினார். உடன் கூடுதல் ஆட்சியர் ஓ.என்.சுகபுத்ரா , நாடாளுமன்ற உறப்பினர் முனைவர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், துரை சந்திரசேகர் மாவட்ட ஊராட்சி/ திட்டக்குழுத்தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட சமூக நல அலுவலர் ரா.சுமதி , மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் சீனிவாசன் உள்பட பலர் உள்ளனர்.

### எச்.ஐ.வி.யை கட்டுப்படுத்த திறம்படப் பணியாற்றியதால்

# தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்திற்கு விருது!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை,டிச.28-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று (27.12.2023), தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் சார்பாக, சென்னை, எழும்பூர், நலவாழ்வு மற்றும் குடும்ப நல பயிற்சி மையத்தில், உலக எய்ட்ஸ் தினம் 2023 நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் முதன் முறையாக எச்.ஐ.வி மற்றும் பால்வினை தொற்று (Syphilis) கண்டறியும் பரிசோதனைக் கருவியை அறிமுகப்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்.

சமூகம் சார்ந்த தொண்டு நிறுவனம் மற்றும் எச்.ஐ.வி உள்ளோர் கூட்டமைப்புகளின் சேவையினை பாராட்டி, பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, சமூகங்களுடன் சேர்ந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் தொற்றினை குறைக்கும் செயலை முன்னெடுப்போம் என்ற கருப்பொருள் அடங்கிய குருந்தகடு மற்றும் விழிப்புணர்வு பதாகைகள் வெளியிட்டு, மாநில அளவில் நடைபெற்ற வினாடி வினா போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி, சமூகம் சார்ந்த தொண்டு நிறுவனம் மற்றும் எச்.ஐ.விஉள்ளோர்கூட்டமைப்புகளின் சேவையினை பாராட்டி, பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, மாநில அளவில் சிறைத்துறையில் எச்.ஐ.வி குறித்த விழிப்புணர்வு சேவையினை கொண்டு சேர்க்க இணைந்து பணியாற்றிய சிறைத்துறை DIG கனகராஜ் அவர்களை பாராட்டி சான்றிதழ் மற்றும் நினைவு பரிசினை வழங்கினார்கள்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:-

உலக எய்ட்ஸ் தினம் 2023!

உலக எய்ட்ஸ் தினத்தையொட்டி, பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம் எச்.ஐ.வி தொற்றினை கட்டுப்படுத்தும் பணியில் திறன்பட செயலாற்றி உள்ளது. அதற்காக ஒன்றிய அரசு 2022-23 ஆம் ஆண்டிற்கான பெரிய மாநிலங்கள் அளவில் சிறந்த செயல்பாட்டிற்கான முதலிடம் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது 1994 இல் Tamil Nadu State Aids Control Society (TANSACS) தொடங்கியதிலிருந்து பெறப்பட்ட முதல் விருது என்பது குறிப்பிடத்தக்கது. மிக விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இந்த விருது சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ரூ.90 இலட்சம் செலவில் பால்வினை தொற்று (Syphilis) கண்டறியும் பரிசோதனைக் கருவி (Testing kit) தமிழ்நாட்டில் முதல்முறையாக இன்று தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ரூ.90 இலட்சம் நிதியிலிருந்து தருவிக்கப்பட்டு, முதற்கட்டமாக 4 இலட்சம் கருவிகள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. ஆண்டுக்கு சுமார் 9 இலட்சம் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பெண்கள் இத்திட்டத்தின் மூலம் பரிசோதிக்கப்படுவர்.

தமிழ்நாட்டில் 104 அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் (NGO), 32 எச்.ஐ.வி உள்ளோர் கூட்டமைப்புகள் என்று 136 தொண்டு நிறுவனங்கள் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்துடன் இணைந்து, எச்.ஐ.வி இல்லா தமிழ்நாடு என்ற இலக்கை நோக்கி பயணிப்பதற்கு உதவியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இதில் சிறப்பாக செயலாற்றிவரும் தொண்டு நிறுவனங் களுக்கு பாராட்டு சான்றிதழ்களும், கேடயங்களும் வழங்கப்பட்டுள்ளது.


இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மொழிப்போர் தியாகி காக்களூர் எஸ்.என்.குமார் மறைவு!

## ஆவடி சா.மு.நாசர் - ஆ.கிருஷ்ணசாமி - வி.ஜி.ராஜேந்திரன்- நிர்வாகிகள் அஞ்சலி!

திருவள்ளூர் டிச 28;

திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவள்ளூர் மேற்கு ஒன்றிய கழக மூத்த முன்னோடி மொழிப்போர் தியாகி முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர் முன்னாள் ஒன்றிய பொருளாளர் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக அயலக அணி துணை அமைப்பாளர் காக்களூர் எஸ்.என். குமார் நேற்று காலை இயற்கை எய்தினார்.



தகவல் அறிந்த திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி , திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் விஜி.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன் ஒன்றிய கழக செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலிஜெயபாலன்,

பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் செ.பிரேம் ஆனந்த், எஸ். மகாலிங்கம், ஜி.நாராயண பிரசாத், சி.சு.ரவிச்சந்திரன், முன்னாள் நகரக் கழகச் செயலாளர் கா.மு.தயாநிதி ஒன்றிய நிர்வாகிகள் கே.கே. சொக்கலிங்கம், தரணி, சாமுண்டீஸ்வரி சண்முகம் , சீனிவாசன், டி.எம். ராமச்சந்திரன், தயாளன், வி . தியாகராஜன் , தி.ஆ.கமல கண்ணன், எஸ்.சௌந்தரராஜன், ஜெய புகழேந்தி , கௌரி கஜேந்திரன், பிரபு, சங்கர், த.சுகு மார், லாசர், கே.சரவணன், காதிர், மீராசா கருணாகரன், ராஜேஷ், பிரான்சிஸ், கிருஷ்ணன், செந்தில், சதீஷ், கார்த்தி , சண்முகம், விக்கி, எம்.கார்த்திக், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

### மாதவரம் 23 'அ' வட்டக் கழக

# மூத்த முன்னோடி டி. செபாஸ்டின் திருவுருவப் படம்!

## புழல் எம் .நாராயணன் திறந்து வைத்தார்!

சென்னை, டிச. 28 -

சென்னை வடகிழக்கு மாவட்டம் ,மாதவரம் வடக்கு பகுதி,23 அ வட்டத்தின் மூத்த முன்னோடி டி. செபஸ்டின் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு காவாங்கரை

கே.எஸ். நகர் பகுதியில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி பிரதிநிதி டி. பார்பன், டி. லாரன்ஸ் ஆகியோரின் சகோதரரும் காவாங்கரைப் பகுதியின் கழக மூத்த முன்னாடியுமான டி. செபஸ்டின் கடந்த இரு வாரங்களுக்கு முன்பு இயற்கை எய்தினார்.

அன்னாரின் திருவுரு வப்பட திறப்பு நிகழ்ச்சி கண்ணப்ப சாமி நகரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. 23 அ வட்ட செயலாளர் வி. ஆர் .குப்பன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு டி.செபஸ்டின் திருஉருவப்படத்தை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார்.

திருவுருவப்படத்திறப்பு நிகழ்ச்சியில் வட்ட கழக நிர்வாகிகள் முத்துகிருஷ்ணன், ஜி. பார்த்திபன், கே. மூர்த்தி, சி. விக்னேஷ், குமார், துரைராஜ், கார்த்தி, பிரதீப், சதீஷ், அசோக், ரமேஷ்பாபு, அருள், கிளாரன்ஸ், தீபக், தினேஷ், எஸ். திலீப், ஜான்சன், கே. மணி, அமீர் பாய், சின்னராஜ், விக்டர் உள்ளிட்ட கழக முன்னோடிகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டார்கள்.

டி. செபஸ்டின்திருவுருவப்படத் திறப்பு நிகழ்ச்சியை தொடர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (27.12.2023) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சென்னை எண்ணூரில் உள்ள தனியார் தொழிற்சாலையில் அம்மோனியா வாயுக்கசிவால் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து நலம் விசாரித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வில் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி மற்றும் மருத்துவத்துறை பேராசிரியர்கள், செவிலியர்கள் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் கிறிஸ்துமஸ் தினத்தையொட்டி மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## திரு.வி.க.நகர் மண்டலத்தில் வளர்ச்சிப் பணிகள்!

### மேயர் ஆர்.பிரியா பார்வையிட்டார்!

சென்னை,டிச.28-

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு74க்குட்பட்ட சந்தியோகி சமாதி தெருவில் உள்ள சமுதாயக் கூடத்தினை மேயர்

ஆர்.பிரியா நேற்று (27.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சமுதாயக் கூடத்தினைப் புதுப்பிக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சந்திரயோகி சமாதி சாலையில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டார்.



திருச்சி விமானநிலையத்தில் விரைவில் பயன்பாட்டுக்கு வரவிருக்கும் பன்னாட்டு விமான நிலையத்தை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள் பார்வையிட்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், காவல்துறை ஆணையாளர் காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் அவர்கள், மாநகராட்சி கமிஷனர் வைத்தியநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, சேர்மன் துரைராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை, எண்ணூர் பகுதியில் தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய

## வாயுக் கசிவு முற்றிலும் நிறுத்தம் - பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை!

### தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவிப்பு!

சென்னை, டிச.28-

சென்னை, எண்ணூர் பகுதியில், நேற்று முன்தினம் (26-12-2023) நள்ளிரவு 11-45 மணியளவில், கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் என்னும் நிறுவனத்தின் அம்மோனியா குழாய்களில் ஏற்பட்ட வாயுக் கசிவினால் அருகில் உள்ள பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன.

சென்னை எண்ணூரில் இயங்கி வரும் கோரமண்டல் இண்டர்நேஷனல் லிமிடெட் தொழிற்சாலையில், விவசாயத்திற்குத் தேவையான உரங்கள் தயாரிக்கப் பட்டு வருகின்றன. இதற்கு அம்மோனியா திரவம் மூலப்பொருளாகத் தொழிற்சாலையின் வளாகத்தில் சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கப் பட்டு வருகிறது. தேவைப்படும் அம்மோனியா திரவம் அவ்வப்போது வெளிநாடுகளில் இருந்து கப்பல் மூலம் இறக்குமதி செய்யப்பட்டு, எண்ணூரில் அமைந்துள்ள சிறு துறைமுகத்திலிருந்து உரிய குழாய்கள் மூலமாக இந்தத் தொழிற்சாலையில் உள்ள சேமிப்புத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு, உற்பத்திக்குப் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் (26.12.2023) நள்ளிரவு 11-45 மணியளவில் இந்தத் தொழிற்சாலையில் உள்ள குழாய்களில் ஏற்பட்ட அம்மோனியா வாயுக் கசிவினால், தொழிற்சாலையின் அருகே உள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசித்து வந்த பொதுமக்களுக்கு கண் எரிச்சல், மூச்சு விடுவதில் சிரமம் போன்ற உபாதைகள் ஏற்பட்டன. வாயுக் கசிவினைக் கண்டறிந்தவுடன், தகுந்த நிபுணர்கள் உடனே வரவழைக்கப்பட்டு, 20 நிமிடங்களில் அந்தத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயுக் கசிவு முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. மேலும், காவல்துறையும், மாவட்ட நிர்வாகமும் ஒருங்கிணைந்து போதுமான ஆம்புலன்ஸ்களை உடனடியாக ஏற்பாடு செய்து, நிலைமை சரிசெய்யப்பட்டது.

இந்த வாயுக் கசிவினால், பெரியகுப்பம், சின்னக்குப்பம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த சுமார் 60 பேருக்கு கண்எரிச்சல்மற்றும்மூச்சு விடுவதில்சிரமம் ஏற்பட்டதையடுத்து, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மற்றும் அதன் அருகில் உள்ள தனியார் மருத்துவமனைகளில் அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது 52 பேர் மருத்துவமனைகளில் தொடர்ந்து கண்காணிப்பில் உள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு மருத்துவ பராமரிப்பு மற்றும் சுகாதார ஆலோசனைகளை வழங்குவதற்காக இரண்டு நுரையீரல் நிபுணர்களைக் கொண்டு 5 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. மேலும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவமனைக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து, அவர்களது உடல் நலன் குறித்து விசாரித்து, உரிய மருத்துவ சிகிச்சைகளை வழங்கிட உத்தரவிட்டார்.

தற்போது குழாயில் அம்மோனியா கசிவு இல்லைஎன தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர் செயலாளர், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தைச் சேர்ந்த நிபுணர்கள், ஒன்றிய மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மண்டல அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலர், தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம் (NEERI), மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI) மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தொழில்நுட்பக் குழு ஒன்று உடனடியாக அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தனதுஉடனடிமதிப்பீட்டுஅறிக்கையை 24 மணிநேரத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்குமாறும், தனது விரிவான அறிக்கையை மூன்று நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், கப்பலில் இருந்து கொண்டு வரப்படும் அம்மோனியாவை வெளியே எடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் குழாய்களை முற்றிலுமாக சரிசெய்து, உரிய பரிசோதனைகள் மேற்கொண்ட பிறகே, அம்மோனியா கப்பலில் இருந்து இறக்கப்பட வேண்டும் என தொழிற்சாலை நிர்வாகத்திற்கு தமிழ்நாடு அரசால் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, வாயுக்கசிவு முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், இது குறித்து பொதுமக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.



தூத்துக்குடி தொகுதி குச்சிக்காட்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நாடாளுமன்ற மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவரும், தூத்துக்குடி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், பார்வையிட்டு மக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

### பதிவாளர்கள் - அதிகாரிகள் பங்கேற்பு!

## உயர் கல்வித் துறையின் ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, டிச. 28-

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உயர்கல்வித் துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட பின் உயர்கல்வித் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், உயர்கல்வித்துறை யின் கீழ் இயங்கும் பிற அலுவலகங்களின் அதிகாரிகளின் கலந்தாய்வுக் கூட்டத்தை நேற்று (27.12.2023) தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்ற கூட்ட அரங்கில் நடத்தி உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் அ. இராமசாமி வரவேற்புரை யாற்றினார்.



இந்த ஆய்வுக் கூட்டத்திற்கு முன்னிலை வகித்த உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக் துறைவாரியான செயல்பாடுகள் குறித்து விரிவாக அமைச்சருக்கு எடுத்துரைத்தார். பின்னர் பல்கலைக்கழகப் பதிவாளர்கள் தங்களது பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகள் குறித்து விவரித்து, தங்களது கோரிக்கைகளைத் தெரிவித்தனர்.

உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தனது தலைமையுரையில், மாணவர்களின் நலனை மேம்படுத்த அரசு கொண்டு வந்துள்ள சிறப்புத் திட்டங்களான முதல் தலைமுறைப் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச் சலுகைத் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம், பொறியியல் கல்லூரிகளில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு மற்றும் கட்டணச் சலுகைத் திட்டம், முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து மாணவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவித் திட்டம் போன்ற திட்டங்களைத் திறம்பட செயல்படுத்திடுமாறு அறிவுறுத்தினார். மேலும், பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும், உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தைத் திறம்படுத்த வேண்டும் என்றும், தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் உலகத் தரத்திற்கு மேம்பட வேண்டுமென்றும், பலவகைத் தொழில்நுட்பக் கல்வி உட்பட அனைத்து பாடப் பிரிவுகளிலும் மாணவர் சேர்க்கையினை அதிக்கப்படுத்த வேண்டும் என்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர். எஸ். ராஜகண்ணப்பன் ஆலோசனை வழங்கினார்.

இவ்வாய்வுக் கூட்டத்தில் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் கொ.வீரராகவ ராவ், தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி நிறுவன ஆணையர், முனைவர். ஆர்.நந்தகோபால், முதன்மைச் செயலாளர் / துணைத் தலைவர், அறிவியல் நகரம், தேவ்ராஜ் தேவ், உயர்கல்வித் துறை துணைச் செயலாளர், க.தர்ப்பகராஜ், கல்லூரிக் கல்வி இயக்குநர், பல்கலைக் கழக பதிவாளர்கள் மற்றும் உயர்கல்வித்துறையின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று நடைபெறும் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வருகை தரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு உற்சாக வரவேற்பு!

### கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும்படி அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், டிச. 28 -

நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் இன்று காலை நடைபெறும் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழாவில் பங்கேற்க வருகை தரும் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன் ஆகியோருக்கு கண்டோன்மெண்ட் - பட்ரோடு அண்ணாசிலை மற்றும் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் அருகில் 2 இடங்களில் இன்று காலை 9.30 மணியளவில் மாபெரும் வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும் இவ்விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அணி திரண்டு பங்கேற்க வேண்டும் என்றும் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்



விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் கேரள மாநிலம் வைக்கத்தில் 1924-ஆம் ஆண்டு நடைபெற்ற வைக்கம் போராட்டம் நூற்றாண்டினை கொண்டாடி சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பு விழா, இன்று 28-ஆம்தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில்அடங்கிய நந்தம்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு முதல் அமைச்சர் - தளபதி மு.க.ஸ்டாலின் இவ்விழாவுக்கு தலைமை யேற்று விழாப் பேருரையாற்றுகிறார்.

கேரள மாநில முதல் அமைச்சர் பினராயி விஜயன் இவ்விழாவுக்கு முன்னிலை வகித்து சிறப்புரையாற்றுகிறார். திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி இவ் விழாவில்பங்கேற்று உரையாற்றுகிறார்.

தமிழ்நாடு - கேரளா மாநில முதல் அமைச்சர்கள் பங்கேற்று சிறப்பிக்கும் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழாவில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய-நகர பகுதி - பேரூர்களில் இருந்து கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு பங்கேற்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நந்தம்பாக்கத்தில் நாளை காலை நடைபெறும் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழாவில் பங்கேற்பது, "நமது கடமை" "நமது உரிமை", என்ற அந்த உணர்வோடு கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு வாரீர்! வாரீர்!! என அன்புடன் அழைக்கின்றேன்.

இன்று 28-ஆம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கெல்லாம் கழகத்தினர் அனைவரும் நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மைய கூட்ட அரங்கில் பெருமளவில் திரண்டுவந்து பங்கேற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை மற்றும் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் ஆகிய 2 இடங்களில் இன்று காலை 9.30 மணியளவில் இரு மாநில முதலமைச்சர்களுக்கும் கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு மேளதாளம் - பேண்டு வாத்தியம் முழங்க எழுச்சியான முறையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, அண்ணாநகர் சட்டமன்ற தொகுதியில் மிக்ஜாம் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்கள் 101 வது வட்டத்தில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் ஏற்பாட்டில் 8000 குடும்பங்களுக்கு வழங்கினார். உடன் அண்ணாநகர் வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் மற்றும் கழக தோழர்கள் பலர் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. சார்பாக - மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் ஏற்பாட்டில்

## மழையால் பாதிக்கப்பட்ட தென் மாவட்ட மக்களுக்கு 41 லட்சத்தில் நிவாரணப் பொருள்கள்!

### அமைச்சர் அர.சக்கரபாணி கொடி அசைத்து அனுப்பி வைத்தார்!

கிருஷ்ணகிரி, டிச.28-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 3 கட்டமாக தென்மாவட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட மக்கள் 4,800 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 41.65 லட்சம் ரூபாய் மதிப்பிலான நிவாரணப் பொருட்களை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி கொடி அசைத்து அனுப்பி வைத்தார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் அரசு விடுதி மாணவர்களுக்கும் 83.35 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நிவாரணப் பொருட்களை கொடுத்துள்ளார் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ.

மழை வெள்ளத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்ப வேண்டுமென கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி கிருஷ்ணகிரி கிழக்கு மன்ற தி.மு.க. சார்பாக கடந்த 20 தினங்களுக்கு முன்பு கடும் புயல் மழையால் பாதிப்படைந்த சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட மக்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை உள்ளிட்ட மளிகை பொருட்களை எட்டு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொருட்கள் அனுப்பப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கடந்த வாரம் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் திடீரென பெய்த பெரும் மழையால் இந்த நான்கு மாவட்ட மக்கள் பெருமளவுக்கு பாதிப்படைந்தனர்.

தென் மாவட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 65.35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிசி, பருப்பு, எண்ணெய், டீத்தூள், ரவை, மைதா, சர்க்கரை உள்ளிட்ட மளிகை பொருட்களும், துணிமணிகள், போர்வை உள்ளிட்டவைகளும் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர் அர.சக்கரபாணி மாவட்ட ஆட்சியர் கே. எம். சரயு அவர்களிடம் ஒப்படைத்து தென் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன.

இதுவரை சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கும், தென் மாவட்டங்களுக்கும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மதியழகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 73.35 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மழை நிவாரணப் பொருட்கள் அனுப்பப் பட்டுள்ளன. இது மட்டும் இல்லாமல் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு விடுகதை விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் பாய், தலையணை, போர்வை ஆகியவற்றை மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தனது சொந்த நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைச்சர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம் எல் ஏ , நாடாளுமன்ற உறுப்பினர் செல்லகுமார், பி.முருகன், கே.ஆர்.கே.நரசிம்மன், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பரிதா நவாப், கதிரவன், அஸ்லாம், நாகராசன், நவாப், கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிர மணி, சாந்தமூர்த்தி , ராஜேந்திரன், அறிஞர், குமரேசன், ஜே.கே.எஸ். பாபு , உஷாராணி குமரேசன் அம்சவேணி செந்தில்குமார், சின்னசாமி, கே.வி. எஸ். சீனிவாசன், பி.டி. அன்பரசன், தினேஷ் ராஜன், இளைய ராஜா, மாணிக்கம் , சங்கர், செந்தில்குமார் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் (CM –ARISE) கீழ், 225 பயனாளிகள் பயன்பெறும் வகையில், 16.76 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான 10.65 கோடி ரூபாய் வங்கிக் கடனுடன் கூடிய 5.80 கோடி ரூபாய் மானியத்திற்கான வரைவோலைகளை வழங்கினார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விழாவில், வெளிநாடுகளில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், மாணவி சுபாஷினி கனடா நாட்டு பல்கலைக்கழகத்தில் சைபர் செக்யூரிட்டி பிரிவில் உயர்கல்வி பயில அனுமதி பெற்ற மாணவி சுபாஷினிக்கு உதவித்தொகைக்கான ஆணையினை வழங்கினார்.

## ரூ.171 கோடியில் திட்டப் பணிகளை திறந்து வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும்

# ரூ.194 கோடியில் ஆதி திராவிடர் - பழங்குடியினருக்கு நலத்திட்ட உதவிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, டிச. 28-

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ரூ.171 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் ரூ.194 கோடி மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், 32.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள் மற்றும் சமுதாயநலக்கூடத்தை திறந்து வைத்து, ரூ.138 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விடுதிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

**அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம்!**

மேலும், 194 கோடி ரூபாய் மதிப்பில், அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம், தமிழ்நாடு பழங்குடி யினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதியம், பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டம், முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டத்தின் கீழ் கடனுதவிகள், பழங்குடியினர் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு வீடுகள் வழங்குதல், உயர்கல்வி பெற கல்வி உதவித்தொகை. கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

**கட்டி முடிக்கப்பட்டுள்ள பள்ளிக் கட்டடங்கள், விடுதிகள் மற்றும் சமுதாயநலக் கூடத்தை திறந்து வைத்தல்**

கடலூர், செங்கல்பட்டு, திருவள்ளூர், விருதுநகர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 10 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 9.22 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக்கூடம், சுற்றுச்சுவர், கழிவறை மற்றும் குடிநீர் வசதி;

திருவள்ளூர், காஞ்சிபுரம், தருமபுரி, விருதுநகர், சிவகங்கை, கிருஷ்ணகிரி, தஞ்சாவூர் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் 19.84 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான 9 விடுதிகள்;

திருப்பூர், ஈரோடு, மதுரை, தென்காசி மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 3.89 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 6 ஆதிதிராவிடர் சமுதாய நலக்கூடங்கள்; என மொத்தம் ரூ.32.95 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**புதிதாக கட்டப்படவுள்ள விடுதிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு அடிக்கல் நாட்டுதல்**

**ரூ.100 கோடியில் விடுதிக் கட்டடங்கள்!**

ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 8 விடுதிக் கட்டடங்கள்;

கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஆதிதிராவிடர் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 4 விடுதிக் கட்டடங்கள்;

மாநிலத்தின் 16 மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின கல்லூரி மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்படவுள்ள 22 கற்றல் கற்பித்தல் அறைகள்; என மொத்தம் 138 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள விடுதிகள் மற்றும் கற்றல் கற்பித்தல் அறைகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2023) சென்னை, கலைவாணர் அரங்கில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ், மாநில அரசு வகுக்கும் எதிர்பாரா திட்டத்தின்படி தீவிர வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் கடனுதவி**

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், 79.35 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 244 பயனாளிகளுக்கு 53.94 கோடி ரூபாய் வங்கிக் கடனுடன் 25 கோடி ரூபாய் மானியம் வழங்குவதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதியத்தின் கீழ் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடு**

தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலினத்தவர் புத்தொழில் நிதியம் திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர்களால் நடத்தப்படும் 3 நிறுவனங்கள் மற்றும் பழங்குடியினரால் நடத்தப்படும் 2 நிறுவனங்கள், என மொத்தம் 5 புத்தொழில் நிறுவனங்களுக்கு 6.50 கோடி ரூபாய் பங்கு முதலீடு வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு வீடுகள் வழங்குதல்**

தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள வீடற்ற தூய்மைப் பணியாளர் உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பங்குத் தொகையில் பயனாளியின் பங்குத் தொகையின் 90 சதவிகிதம் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் மானியமாக விடுவிக்கப்பட்டு 55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**பழங்குடியினருக்கு வீடுகள் வழங்கும் திட்டம்!**

பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 443 பழங்குடியின இருளர் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், காஞ்சிபுரம், உத்திரமேரூர், வாலாஜாபாத் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் ஆகிய வட்டங்களில் 22.80 கோடி ரூபாய் செலவில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 443 வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தில் வங்கிக் கடனுதவி**

முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் (CMARISE) கீழ், 225 பயனாளிகள் பயன்பெறும் வகையில், 16.76 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான 10.65 கோடி ரூபாய் வங்கிக் கடனுடன் கூடிய 5.80 கோடி ரூபாய் மானியத்திற்கான வரைவோலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டம்!**

பழங்குடியினருக்கான வாழ்வாதார திட்டத்தின் கீழ், பழங்குடியினரின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக, பிரத்யேகமான வருவாய் ஈட்டும் திட்டங்களை அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தும் வகையில், வேளாண் பொறியியல் இயந்திரங்கள் வழங்குதல், சூரியமின் சக்தியுடன் இயங்கும் அரவை இயந்திரங்கள் வழங்குதல் மற்றும் அரியலூர் மாவட்ட இருளர் இன பழங்குடியின மக்களுக்கு முந்திரி சேகரம் செய்து கொள்ளும் உரிமைக்கான ஆணைகள், என மொத்தம் 1 கோடி ரூபாயில்,

5 பழங்குடியின சங்கங்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சங்க நிர்வாகிகளுக்கு ஆணைகளை வழங்கினார்.

**புதிரை வண்ணார் பயனாளிகளுக்கு வங்கிக் கடனுதவி**

விளிம்பு நிலையில் உள்ள புதிரை வண்ணார் இன மக்களுக்கான, அடிப்படை சமூக பொருளாதார கணக்கெடுப்பு பணி தொடங்கப்பட்டு, அதன் மூலம் கண்டறியப்பட்ட 10 புதிரை வண்ணார் பயனாளிகளுக்கு 44.16 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பிற்கான, 27.98 இலட்சம் ரூபாய் வங்கிக் கடனுதவியுடன் கூடிய 15.45 இலட்சம் ரூபாய் மானியத்திற்கான ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ், மாநில அரசு வகுக்கும் எதிர்பாரா திட்டத்தின்படி (Model Contigency Plan) தீவிர வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் 50 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், அலுவலக உதவியாளர், சமையலர் ஆகிய பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு உட்பயிற்சி உதவித்தொகை வழங்குதல்**

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயின்று வரும் 1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு உட்பயிற்சி (Internship) காலங்களுக்கான உதவித்தொகை 1 கோடி ரூபாய் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**வெளிநாடுகளில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில கல்வி உதவித் தொகை வழங்குதல்**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவராக மதம்மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கள் வெளிநாடுகளில் கல்வி பயில்வோருக்கான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், ஆண்டுக்கு 8 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கு 36 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும், ஆண்டுக்கு 8 இலட்சம் ரூபாய்க்கு மேல் 12 இலட்சம் ரூபாய்க்கு குறைவாக வருமானம் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கு 24 இலட்சம் ரூபாய்க்கு மிகாமலும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், வெளிநாட்டில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயில்வதற்காக இந்த ஆண்டு 30 மாணவ, மாணவியர்களுக்கு அனுமதி ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

**முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பிற்கான ஊக்கத்தொகை வழங்குதல்**

முழுநேர முனைவர் ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 60 மாணவ, மாணவியர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகைக்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, எஸ். ஸ்டாலின் குமார், கு. செல்வப்பெருந்தகை, எஸ்.எஸ். பாலாஜி, எம்.பன்னீர்செல்வம், திருமதி கே. சிவகாமசுந்தரி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் திருமதி க. லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் த.ஆனந்த், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல். நிர்மல்ராஜ், பழங்குடியினர் நல இயக்குநர் எஸ். அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (27.12.2023) முகாம் அலுவலகத்தில், அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான டாக்டர் ந. கண்ணையா அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தென்னக இரயில்வே தொழிலாளர்கள் சார்பாக 75 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து மஸ்தூர் சபா அகில இந்திய தலைவரும் தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் தலைவருமான சி.ஏ. ராஜா ஸ்ரீதர் உள்ளார்.

## “முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு”

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் இரண்டாம் கட்டமாக வழங்கல்!



சென்னை, டிச. 28-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டின்" புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் இரண்டாம் கட்டமாக வழங்கும் பணியினை நேற்று (27.12.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின், தலைமைக் கழக துணை மேலாளர் என்.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதுபோது, அரியலூர் மாவட்டச் செயலாளரும் போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ்.சிவசங்கர், தனது மாவட்டத்திற்கான உறுப்பினர் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

அதைப்போலவே, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட உறுப்பினர் சீட்டுகளை, மாவட்டச் செயலாளர் பரிந்துரையின் பேரில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம் டி.வெங்கடேசன் பெற்றுக் கொண்டார்.

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் நேரில் ஆய்வு!

# தென்காசி மாவட்டத்தில் அதிகனமழை: பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பயிர்ச் சேதம்!

### ஆட்சியர் துரை.ரவிச்சந்திரன் - ஈ.ராஜா - வே.ஜெயபாலன் - தனுஷ் எம்.குமார் முன்னிலையில்!

தென்காசி, டிச.28-

தென்காசி மாவட்டத்தில் கடந்த 17.12.2023,18.12.2023 ஆகிய இரு தினங்களில் பெய்த அதி கனமழையின் காரணமாக பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட பயிர்ச் சேதத்தினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் எம் குமார் எம்.பி.ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வுப் பணி மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் கே.கே. எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் இது வரை 228 கிராமம் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. சுமார் 16 கோடி ரூபாய் மதிப்பிலான 18.077 ஹெக்டேர் அளவிலான பயிர்கள் சேதம் அடைந்ததுள்ளது. 5 ஆடு, மாடுகள் மற்றும் 4800 கோழிகள் உயிரிழந்துள்ளது.முழுமையாக 92 வீடுகளும்,200 வீடுகள் பகுதியாகவும் இடிந்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் எந்த ஒரு விவசாய நிலங்களும் கணக்கெடுப்பில் விடுபடாமல் இருக்க உத்தரவிட்டுள்ளார். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று அதன் அடிப்படையில் உரிய நிவாரணம் அளிக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து சங்கரன் கோவில் ஆதிதிராவிட சமுதாய நலக்கூடத்தில் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 300 பயனாளிகளுக்கு 5 கிலோ அரிசி, காய்கறிகள், போர்வை உள்ளிட்ட நிவாரண பொருட்களை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வழங்கினார்.

முன்னதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.இராமச்சந்திரன் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சாயமலை பகுதியில் பயிற்சி சேதங்களையும், மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுக் கொண்டார்.


இந்நிகழ்வில் வேளாண்மைதுறை இணை இயக்குனர் பத்மாவதி, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் சுப்பு லட்சுமி, நகர்மன்ற தலைவர்கள் உமா மகேஸ்வரி (சங்கரன்கோவில்)விஜயா (புளியங்குடி)ஒன்றியக் குழுத் தலைவர் லாலா சங்கர பாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றியச் செயலாளர்கள் பெரிய துரை, பூசைபாண்டியன், ராமச்சந்திரன், நகரச் செயலாளர்கள் பிரகாஷ் (சங்கரன் கோவில்) அந்தோணி சாமி(புளியங்குடி) சங்கரன் கோவில் நகர்மன்ற ஆணையாளர் சபாநாயகம் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் துரை. ரவிச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், தனுசு எம். குமார் எம்.பி. மாவட்ட துணைச் செயலாளர்கள் தமிழ்ச்செல்வி, கென்னடி, ஒன்றிய செயலாளர்கள் ஜெயக்குமார், மகேஷ் மாயவன் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செட்டிகுளம் ஊராட்சி, அரசு உயர் நிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் வருவாய் கோட்டாட்சியர் உள்ளார்.





வைக்கம் போராட்டம்
நூற்றாண்டு சிறப்பு விழா
நாள் : 28.12.2023 வியாழக்கிழமை காலை 11.15 மணி
இடம் : சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை.
சிறப்பிக்க வருகை தரும்
கழகத் தலைவர்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின்
அவர்களையும்
மாண்புமிகு கேரள முதலமைச்சர்
பினராயி விஜயன்
அவர்களையும்
திராவிடர் கழகத் தலைவர்
கி.வீரமணி
அவர்களையும்
வருக. வருக..
என அன்புடன் வரவேற்கும்.
தா.மோ.அன்பரசன்
மாவட்டச் செயலாளர்
குறு – சிறு – நடுத்தர தொழில்
நிறுவனங்கள் துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.
ARASU ARTS



சென்னைக்கு வருகை தந்த கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களை சென்னை விமான நிலையத்தில் நேற்று (27.12.2023) , குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர்.



அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதியினுள் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அண்ணாநகர் தொகுதி 60,000 மக்களுக்கு உடனடி நிவாரணமாக உணவு, பால் மற்றும் 2000 லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்தார். தொடர் நிவாரணமாக சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 14 வட்டங்களில், மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 80,000 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்குதலை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மேற்பார்வையிட்டு சென்ற 14.12.2023 (வியாழக்கிழமை) தேதியன்று துவக்கி வைத்தார். அண்ணாநகர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 14 வட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன் சீரிய ஏற்பாட்டில் 80,000 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது. மேலும் மருத்துவ முகாம்கள் தொகுதி முழுவதும் நடத்தப்பட்டன. கழக தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் தலைமையில் அண்ணாநகர் பகுதி கழகச் செயலாளர்கள் ந. இராமலிங்கம், ச. பரமசிவம், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள், பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வீடு வீடாக சென்று நிவாரண பொருட்களை மக்களுக்கு வழங்கினர்.

### கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழியெங்கும் வரவேற்பு!

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு! அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம்,டிச.28- வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் ரூ.400 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழியெங்கும்பிரமாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் நந்திவரம் - கூடுவாஞ்சேரி, ஜி.எஸ்.டி. நெடுஞ்சாலையில் அமைந்துள்ள என்.பி.ஆர். திருமண மண்டபத்தில் கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

செங்கல்பட்டு சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கே.எஸ்.எம்.நாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், த.ஜெயக்குமார், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள் க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், ஆர்.எஸ்.சங்கர், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் எல்.பிரபு, என்.கனகராஜ், பா.ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா.செந்தில்தேவராஜ், த.வினோத்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், பொன்.ரமேஷ்கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், உதயா கருணாகரன், சசிகலா, கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு,

தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

வருகிற 30.12.2023 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்டம் வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் 86 ஏக்கர் பரப்பளவில் ரூ. 400 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" என்ற புதிய பேருந்து முனையத்தை திறந்து வைக்க வருகை தரும் நாம் நாளும் உயிராய் போற்றி விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அன்புத் தலைவர் தளவதி அவர்களுக்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட எல்லையான ஆலந்தூர் முதல் வண்டலூர் வரை வழியெங்கும் பிரமாண்டமான முறையில் எழுச்சியான வகையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்றும், மாவட்டம் முழுவதும் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் சிற்றூர்களில் இருந்து கழக நிர்வாகிகள் கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினரும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் அலைகடலென திரண்டு வந்து, தங்கள் கரங்களில் கழகத்தின் இரு வண்ண கொடி பதாகைகளை ஏந்தி மேளதாளம் பேண்டு வாதியம் முழங்கபிரம்மாண்டமான முறையில் உற்சாக வரவேற்பு அளிப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் கேரள மாநிலம் வைக்கத்தில் 1924ஆம் ஆண்டு நடைபெற்ற வைக்கம் போராட்டம் நூற்றாண்டினை கொண்டாடி சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பு விழா,

நாளை 28ஆம்தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய நந்தம்பாக்கத்தில் அமைந்துள்ள சென்னை வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் விழாவில் கேரள மாநில முதல் அமைச்சர் பினராயி விஜயன் இவ்விழாவுக்கு முன்னிலை வகித்து சிறப்புரையாற்றுகிறார். திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி இவ்விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

நம்முடைய மாவட்டத்தில் அடங்கிய நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெறும் வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழாவில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் இருந்து கழக நிர்வாகிகள் கழக அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு வந்து காலை 10.30 மணியளவில் பங்கேற்பது என்றும்,

கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் மற்றும் நந்தம்பாக்கம் வர்த்தக மையம் ஆகிய 2 இடங்களில் நாளை 28.12.2023 ஆம் தேதி காலை 9.30 மணியளவில் மாவட்ட திமுக சார்பில் இரு மாநில முதலமைச்சர்களுக்கும் கழகத்தினர் அனைவரும் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு மேளதாளம் பேண்டு வாத்தியம் முழங்க எழுச்சியான முறையில் வரவேற்பு அளிப்பது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

வருகிற ஜனவரி மாதம், 3வது வாரத்தில் சேலத்தில் நடைபெறவுள்ள கழக இளைஞரணி செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் வருங்காலத்திற்கு வழிக்காட்டும் வசந்த மலராய் திகழும் நம் நெஞ்சம் நிறைந்த இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் கழக இளைஞரணி 2வது மாநில மாநாட்டில்,

நமது காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக இளைஞர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் 10,000க்கும் மேற்பட்ட இளைஞர் அணியினர் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு இம்மாநாட்டை பிரமாண்டமான மாநாடாக வெற்றியடைய செய்ய வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் BLA2, மற்றும் 100 வாக்காளர்களுக்கு ஒரு தேர்தல் பணிக் குழு உறுப்பினர்கள் என நியமனம் செய்யப்பட்ட BLC ஆகியோர் அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 100 வாக்களர்களை கழக நிர்வாகிகள் துணையுடன் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்து மாவட்ட கழகம் அச்சிட்டு தந்துள்ள 2 படிவங்களில் வாக்காளர் பற்றிய முழு கணக்கெடுப்பு செய்யும் இன்றியமையா பணியை விரைந்து முடித்திடுவது என்றும், அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப அணி தேர்தல் பணிக்குழு உறுப்பினர் உடனிருந்து இக்கணக்கெடுக்கும் பணிக்கு உதவிட வேண்டும் என்றும், இந்த 2 படிவங்களையும் அடித்தல் திருத்தம் இல்லாமல் பூர்த்தி செய்து விரைந்து முடித்து வருகிற ஜனவரி 5ஆம் தேதிக்குள் மாவட்ட கழகத்திடம் வழங்கிட வேண்டும் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக தீர்மானிக்கிறது.

தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் வருகிற 15.1.2024 திங்கட் கிழமை அன்று கழக கொடி தோரணங்களை அழகுற கட்டி, கழகக் கொடியினை கழக முன்னோடிகளை வைத்து ஏற்றி, பொதுமக்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்கி

தமிழ்ப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பறை சாற்றும் விழாவாக தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழாவினை வழக்கம் போல மிகவும் எழுச்சியுடனும் உற்சாகத்துடனும் மிகச்சிறப்பான முறையில் சமத்துவ பொங்கல் விழாவாக கொண்டாடுவது என்றும், அந்தந்த ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் உள்ள மக்கள் அனைவரும் பொங்கல் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கண்டுகளிக்கும் வகையில் தமிழர்களின் வீர விளையாட்டுப் போட்டிகள் கோலப் போட்டி உட்பட பல்வேறு வகையான போட்டிகளை நடத்துவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.



இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கப்படும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்வில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்து மாணவிகள் 240 பேருக்கு மிதிவண்டிகள் வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்வில் பள்ளித் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மாணவியர்கள் இருந்தனர்.

### திருச்சி பன்னாட்டு

# விமான நிலையத்தில் புதிய முனையம்!

### அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

திருச்சி, டிச. 28 - திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய முனையத்தை அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டார்.

திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் ரூ. 951 கோடியில் புதிய முனையம் அமைக்கும் பணியை கடந்த 2019ஆண்டு பிப். 10 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி வாயிலாக தொடக்கி வைத்தார்.

இப் பணிகள் 2021ஆவது ஆண்டு செப்டம்பர் மாதத்துக்குள் முடித்து புதிய முனையத்தை செயல்பாட்டுக்குக் கொண்டு வர விமான நிலைய ஆணையக் குழுமம் திட்டமிட்டிருந்தது. ஆனால், கொரோனா பரவல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பணிகள் முற்றுப்பெறாத நிலையில் 2021, 22, 23 ஆகிய மூன்றாண்டுகளும் தள்ளிப்போயின. அடுத்தடுத்து 2 அல்லது 3 முறை திறப்பு விழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிலையிலும் பணிகள் முடிவடையாததால் திறப்பு விழா நடத்தப்படவில்லை. இதனைத் தொடர்ந்து, கூடுதலான பணியாளர்கள் மூலம் கடந்த சில மாதங்களாக இரவு, பகலாக நடைபெற்ற பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன.

புதிய முனையத்தின் சிறப்பம்சம்: புதிதாக அமைக்கப்பட்டுள்ள முனையம் 60 ஆயிரத்து 723 ச.மீ. பரப்பளவில் 2 அடுக்குகளைக் கொண்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரே நேரத்தில் 4 ஆயிரம் பன்னாட்டு பயணிகளையும், 1,500 உள்நாட்டு பயணிகளையும் கையாளக் கூடிய வகையில் குடியேற்றப் பிரிவினருக்கான 40 செக் அவுட் மற்றும் 48 செக் கவுன்ட்டர்கள், விமானங்கள் நிறுத்த 10 ஏப்ரான்கள் மற்றும் ஏரோ பிரிட்ஜ் (விமானத்திலிருந்து முனையத்தில் நுழையும் பகுதி), 26 இடங்களில் லிப்ட் மற்றும் நகரும் படிக்கட்டுகள் (எஸ்கலேட்டர்), சுங்கத்துறையினருக்கென 3 சோதனை மையங்கள், 15 இடங்களில் எக்ஸ்ரே சோதனை மையங்கள், 3 இடங்களில் வி.ஐ.பி. காத்திருப்பு அறைகளுடன், விமான நிலைய வளாகத்தில் சுமார் 1,000 கார்களை நிறுத்தும் வகையில் வாகன நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் தேசத்தின் நாகரிகம், கலாச்சாரம், பண்பாடுகளை பறைசாற்றும் விதமாக நிலைய வளாகத்தில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் போன்ற மாதிரி கோபுரம் புதிய முனையத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல, வருகை, புறப்பாடு, பயணிகள் காத்திருப்பு அறைகள் போன்ற பகுதிகளில் புதிய அதிநவீன வசதிகளுடன் உள்கட்டமைப்பு மற்றும் அலங்காரம் செய்யப்பட்டுள்ளது. சூரிய சக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் வகையில் புதிய முனையத்தின் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர ரூ.75 கோடி செலவில் சுமார் 42.5 மீ உயரம் கொண்ட கண்காணிப்பு கோபுரத்துடன் கூடிய வான் கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தனை சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள இந்த புதிய முனையம் ஜனவரி 2 ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளார்.

இது தொடர்பாக ஆலோசனைக்கூட்டமும் நடைபெற்றது. மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாநகர காவல் ஆணையர் காமினி தலைமையில் காவல்துறையினர் கடந்த இரண்டு நாள்களாக ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்..

இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் புதிய விமான நிலைய முனையத்திற்கு வர இருப்பதால் அதற்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு விமான நிலைய அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்..

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மாநகர காவல் ஆணையர் காமினி மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன் மாநகராட்சி மேயர் அன்பழகன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

# உத்திரமேரூர் ஒன்றியத்தில் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### க.சுந்தர் எம்.எல்.ஏ. -க.செல்வம் எம்.பி. வழங்கினர் ! கெ.ஞானசேகரன் பங்கேற்பு!

சென்னை, டிச. 28 - காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியத்திற்குட்பட்ட, உத்திரமேரூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்புலிவனம், கம்மாளம் பூண்டி, மானாம்பதி, களியாம்பூண்டி, பெருநகர் அரசு மேல்நிலைப்பள்ளியில. நேற்று மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் , காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட துணை செயலாளர் க.செல்வம் , உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு உறுப்பினர் மரியாதைக்குரிய கெ.ஞானசேகரன் ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், உத்திரமேரூர் பேரூராட்சி செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல், உத்திரமேரூர் பேரூராட்சி மன்ற தலைவர், பொதுக்குழு உறுப்பினர் பி.சசிகுமார், உத்திரமேரூர் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், ஒன்றிய கழக துணை செயலாளர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள் சுகுனா சுந்தரராஜன், தயாளன்(எ) ருத்திரகோட்டி, கெங்கன், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் யுவராஜ் மற்றும் உத்திரமேரூர் ஒன்றிய நிர்வாகிகள்,மாவட்ட ,ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கழக தோழர்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஆழிப் பேரலை 19ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளரும் வடசென்னை ஐக்கிய கிராம சபை தலைவர் பா.கோதண்டன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா தலைமையில் மௌன ஊர்வலம் காசிமேடு எஸ்.என். செட்டி தெருவில் புறப்பட்டு கடற்கரை வழியாக வடசென்னை ஐக்கிய பஞ்சாயத்து சபை அருகில் மலர் வலையம் வைத்து அஞ்சலி செலுத்தி 1000 பேருக்கு அரிசி, போர்வை,உணவு ஆகியவற்றை மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ,ஐட்ரிம்ஸ் மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் வழங்கினர். பகுதிச் செயலாளர்கள் இரா. லட்சுமணன், இரா.செந்தில்குமார், ஆர்.வெற்றிவீரன், என்.மருதுகணேஷ், ஜெயபால்,பாலு, என். கிருஷ்ணன், ஆர்.வி.கணேஷ், மா.நாகராஜ், நா.கோதண்டன், பவித்ரா எம்.சி, எல்.ரமேஷ்,சி.பிரேம், என்.கிருஷ்ணராஜ், ஆர்.முத்துவீரன், பி.மணி,ஆர்.கே.நகர், இராயபுரம் பகுதி கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு74க்குட்பட்ட நியூ வாழைமா நகர், 8ஆவது தெருவில் மேயர் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.93 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் இறகுப்பந்து கூடத்தின் கட்டுமானப் பணியினை மேயர் ஆர்.பிரியா நேற்று (27.12.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கொரோனா காலத்தில்

# எடியூரப்பா ஆட்சியில் 40 ஆயிரம் கோடி ஊழல்!

## பா.ஜ.க. எம்.எல்.ஏ. பகிரங்க ஒப்புதல்!

*பெங்களூரு, டிச. 28 -*

*கர்நாடகா மாநிலம் விஜயாப்புராவில் செய்தியாளர்களிடம் பேசிய, அந்த தொகுதியின் பா.ஜ.க. எம்.எல்.ஏ., பசனகவுடா பட்டடீல் யத்னால், முன்னாள் முதலமைச்சர் எடியூரப்பா மற்றும் அவரது மகன் விஜயேந்திராவுக்கு எதிராக அடுக்கடுக்கான புகார்களை முன்வைத்தார்.*

*கொரோனா முதல் அலையின் போது, எடியூரப்பா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியில் மருத்துவ உபகரணங்கள் வாங்கியதில் 40 ஆயிரம் கோடி ரூபாய் முறைகேடு நடந்திருப்பதாக பா.ஜ.க. எம்.எல்.ஏ. குற்றம்சாட்டினார்.*

*45 ரூபாய் மதிப்பிலான முகக்கவசத்தை எடியூரப்பா ஆட்சியில் 485 ரூபாயாக விலை நிர்ணயம் செய்யப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டதாக அவர் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.*

*பெங்களூருவில், 10 ஆயிரம் படுக்கைகள் கொண்ட கொரோனா சிகிச்சை மருத்துவமனையை உருவாக்கியதாகவும், ஆனால் அந்த 10 ஆயிரம் படுக்கைகளுக்கு வாடகை நிர்ணயம் செய்ததில் எடியூரப்பா ஊழல் செய்ததாகவும் பா.ஜ.க. எம்.எல்.ஏ. சாடினார்.*

*கொரோனா காலத்தில் மருத்துவமனைகளுக்கான படுக்கைகளை வாடகைக்கு எடுத்துள்ளனர். மருத்துவமனைகளில் வாடகைக்கு படுக்கைகளை எடுத்து விட்டு, வாடகைக்கும் ஒரு தொகை, அதே படுக்கையை கொள்முதல் செய்ததாகவும் ஒரு தொகை குறிப்பிட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. ஒரு படுக்கைக்கு 20 ஆயிரம் ரூபாய் என மதிப்பிட்டு மிகப்பெரிய அளவில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இதே போல், கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க ஒருவருக்கு 8 லட்சம் முதல் 10 லட்சம் வரை கட்டணம் வசூலிக்கப்பட்டதாகவும் பா.ஜ.க. எம்.எல்.ஏ. குற்றம்சாட்டினார். இதற்கான அனைத்து ஆதாரங்ளும் தன்னிடம் உள்ளதாக பா.ஜ.க. எம்.எல்.ஏ. பசனகவுடா பட்டடீல் யத்னால் கூறியுள்ளார். எடியூரப்பா தலைமையிலான பா.ஜ.க. ஆட்சியின் போது கொரோனா காலத்தில் மட்டும் 40 ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாக, அந்த கட்சியின் சட்டமன்ற உறுப்பினரே குற்றம்சாட்டியிருப்பது கர்நாடக அரசியலில் மட்டுமல்ல, டெல்லி அரசியலிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*



மாதவரம் 23 அ வட்டத்தின் மூத்த கழக முன்னோடியும், பகுதிப் பிரதிநிதியுமான டி.பார்பன் டி.லாரன்ஸ் ஆகியோரின் சகோதரருமான டி.செபாஸ்டின் படத்தினை பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் திறந்து வைத்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கோவை ப. கோபால்**

**டிசம்பர் 28 (1972)**



**கோவை நகரக் கழகச் செயலாளராகவும் – கோவை மேற்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றவர்.**

**“அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தின் கொள்கைகளை உள்ளத்தில் பதியவைத்து, எந்தச் சூழ்நிலையிலும் கட்டுப்பாட்டை மீறாமல் பணியாற்றிய அன்புத் தங்கம்” என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# “உதயநிதி ஸ்டாலின் எழுப்பிய உரிமைக் குரலும் ஒன்றிய அமைச்சரின் ஏளனப் பேச்சுகளும்....!”

மழை வெள்ளப் பாதிப்புக்காகத் தமிழ்நாடு அரசு நிவாரண நிதி கேட்டால், “நாங்கள் என்ன ஏ.டி.எம்.ஆ” என ஒன்றிய அமைச்சர் ஒருவர் கூறியதாகச் செய்தியாளர் அமைச்சர் உதயநிதியிடம் எழுப்பிய கேள்விக்கு,“அவர் அப்பா வீட்டுப் பணத்தை நாங்கள் கேட்கவில்லை; தமிழ்நாடு மக்கள் அளித்த வரிப் பணத்தைத் தானே கேட்கிறோம்” என்றுகூறினார் . உடனே அவர் பேச்சில் மரியாதை சற்று குறைவாக இருப்பதாகவும், அப்போது சிலர் வருத்தப் பட்டார்கள் எனவும் கூறிய அடுத்த நாளே ஒன்றிய அமைச்சர் அவருடைய அப்பா வீட்டு பணத்தைச் கேட்கவில்லை என்று அவர்கள் கூறிய படியே மிகுந்த மரியாதையுடன் கேட்டுக் கொண்டார்.

எனினும்,அமைச்சர் நிர்மலா சீதாராமன் “மொழி நடை” குறித்துப் பாடம் எடுத்துள்ளார். ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களின் மரியாதைக் குரிய அப்பா வீட்டு பணத்தை நான் கேட்கவில்லை; தமிழ்நாடு மக்கள் செலுத்திய வரிப் பணத்தில் இருந்து தமிழ்நாடு அரசு கோரிய பேரிடர் நிவாரண நிதியைத் தான் கேட்கிறோம்; வழக்கமாக ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் மாநிலப் பேரிடர் நிவாரண நிதியைத் தந்து விட்டு, ஏதாவது ஒன்றிய அரசின் தேசியப் பேரிடர் நிவாரண நிதியில் இருந்து தந்தது போல, அடித்துப் பேச வேண்டாம்; நாங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் மரியாதை தருவதற்குத் தயாராகவே இருக்கிறோம்; தமிழ்நாடு மக்கள் மீது கொஞ்சமாவது அக்கறை வைத்து நிவாரண நிதியைத் தாருங்கள் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே”.... என்று மீண்டும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு வேண்டுகோள் வைத்து வினா எழுப்பி இருந்தார்.

உதயநிதி பேசியது சரியில்லை என்று கூறும் நிர்மலா சீத்தாராமன் கீழ்க்கண்ட வார்த்தைகளை பேசியது யார் என்று கூறத்தயாரா?

“பணம் கொடுத்தீங்க... பணம் கொடுத்தீங்கன்னு சொல்றீங்களே... அது என்ன உங்க மாமா வீட்டுப் பணமா?” இப்படிப் பேசியவர் யார் தெரியுமா? 2014 ஆம் ஆண்டு குஜராத்தில் முதலமைச்சராக இருந்த இன்றைய பிரதமர் மோடி அவர்கள் தான் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அப்படிப் பேசினார் என்பதை அவரின் பேச்சுகளை ஊடகங்கள் இன்றும் வெளியிட்டு வருகின்றன. ஆயினும், நிர்மலா சீதாராமனும், அவரது படை பரிவாரங்களும், பா.ஜ.க. வினரும் கேட்ட நிவாரணம் குறித்துஏதும் பேசாமல், உதயநிதி ஸ்டாலினைத் தாக்கிப் பேசுவதிலேயே அக்கறை காட்டி வருகிறார்கள்.

மாநில அரசு அதிகாரிகள் விரைந்து செயல்படவில்லை என்று பொத்தாம் பொதுவாக சொல்கிறார். இது மொத்த அதிகாரிகளையும் களத்தில் இருந்து போராடும் களப்பணியாளர்களையும் வேதனைப்படுத்தும் அல்லவா? முன்னேற்பாடு செய்திருந்தால் பெருமழை வெள்ளத்தில் இவ்வளவு சேதம் ஏற்பட்டு இருக்காது என்று கழக அரசின் மீது குற்றம் சாட்டி விட்டு “ நானும் வந்தேன், பார்த்தேன்.” என்று பொத்தாம் பொதுவாக விளம்பரத்திற்காக விமர்சனம் செய்து விட்டு டெல்லிக்குப் பறந்து ஓடிவிட்டார் அந்த ஒன்றிய அமைச்சர்.

அதே நேரத்தில் தமிழகத்தில் மதுரையில் பிறந்து, வளர்ந்தவர்க்கு இம் மண்ணின் மீது பற்று, பாசம் வர வேண்டாமா? ‘பொருளாதார நிபுணரான அவருடைய கணவர் பரகலா பிரபாகர் (“The Crooked Timber of New India”_Prakala Prabhakar)என்பவரால் எழுதப்பட்ட நூலில் “பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் அது நாட்டுக்குப் பேரழிவாக இருக்கும்” என்று கூறியுள்ளதை மறுக்க முடியுமா? அல்லது மறைக்கத்தான் முடியுமா? மோடியின் சர்வாதிகார ஆட்சியை விமர்சித்து வருகிற மதிப்புமிகு பரகலா பிரபாகர் அவர்களின் துணைவியா ரான இந்த அம்மையார், திடீர் ஒன்றிய அமைச்சராகித் திமிரான பேச்சுகளை நாடாளுமன்றத்திலும், நடைபாதைப்பொது வெளிகளிலும் எதிர்க்கட்சிகளை மனம் போன போக்கில் பேசி வருகிறார். பெருமழையில் சேதமடைந்த தென்பகுதிகளை சென்று பார்க்காமலேயே டெல்லி திரும்பி விட்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தமிழக முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நேரில் பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி நிவாரணத் தொகை அறிவித்துள்ளனர். அரசு அதிகாரிகள், மாநில தேசிய மீட்புக் குழுவினர், தூய்மைப் பணியாளர்கள், சுகாதார ஊழியர்கள், அரசு ஊழியர்கள், தன்னார்வலர்கள், அரசியல் கட்சியினர், பொதுமக்கள் என களப்பணியாளர்கள் அனைவரும் இரவு பகல் பாராமல் துயர் துடைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். மாநிலம் முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களும், தென் மாவட்ட மக்களுக்கு நேசக் கரம் நீட்டி வருகின்றனர். தமிழகத்தில் ஏற்பட்ட பாதிப்புகளைக் கணக்கிட்டு முதலமைச்சர், பிரதமரிடம் போர்க் கால அடிப்படையில் நிவாரண நிதியும் கேட்டு வலியுறுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திக்காமல், அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்காமல், அந்தப் பகுதிக்கு; ஏன் தென்பகுதிகளுக்குச் சென்று தலைகாட்டாமல் இருக்கிற ஒருவர், முதலமைச்சரையும் மாநில அமைச்சர்களையும் அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் உண்மைக்கு மாறாக விஷயங்களைப் புதுத்தில்லியில் செய்தியாளரிடம் அள்ளி வீசியுள்ளார். இப்படிப் பேசி வருவது எந்த விதத்தில் நியாயம்? தற்போது வரை தமிழகத்தின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவர் தலை காட்டவே இல்லை. நிதியமைச்சரின் போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது”....இப்படியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் கண்டனம் தெரிவித்துள்ளார்...

“இதுபோன்ற குற்றச்சாட்டைச் சொல்லக் கூடியவர்கள் மணிப்பூரில் ஆறு மாத காலமாகக் கலவரம் நடந்தது. 1,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள். பிரதமர் மோடி ஒரு முறை கூட அங்கு சென்றதும் இல்லை; அது பற்றிப் பேசியதும் இல்லை. இது போன்ற தலைமையை வைத்துக்கொண்டு நிர்மலா சீதாராமன் பேசுவது கண்மூடித்தனமாக தமிழக அரசு மீது வெறுப்பை காட்டுவது ஆகும்”...என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ். அழகிரி தனது அறிக்கையின் வாயிலாக வன்மையாக கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

“2015 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட வர்தா புயல் இயற்கைச் சீற்றத்தால் ஏற்பட்ட பேரிடர் இழப்புகளைக் கற்றுக் கொண்ட பாதிப்புத்திட்டத்தினை படிப்பினை அடிப்படையில், உடனடி திட்டங்கள், தொலை நோக்கு நிரந்தரத் திட்டங்கள் என்ற முறையில் விரிவான பாதுகாப்பு திட்டங்களை அறிவித்து 2015 முதல் 2021 வரை ரூபாய் ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 692 -கோடி மதிப்பில் தயாரித்து அதற்கான நிதியை வழங்குமாறு தமிழ்நாடு அரசு, ஒன்றிய அரசிடம் கேட்டும்,வெறும் ரூபாய் 5,300 கோடி, அதாவது 4.61 சதவீத நிதி மட்டும் வழங்கித் தமிழக அரசை வஞ்சித்து விட்டது. ஆனால், பா.ஜ.க. ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்தியா கூட்டணி உருவாக்கி வரும் அரசியல் பேரலைகளைக் கண்டு அரண்டு போய்ப் பிதற்றி வருகிறார் ஆசிட் வார்த்தைகளை அள்ளி வீசுகிறார்” என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் தமது கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார்.


“தமிழக பேரிடர் வெள்ளப் பாதிப்பைத் தேசிய பேரிடர் இழப்பு என அறிவிக்க மாட்டோம்” எனக் கூற இவருக்கு அதிகாரம் இல்லை. தி.மு.க.வுக்கு எதிராகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு தமிழக மக்களுக்கு எதிராகப் பேசுகிறார். பிரதமரை முதல்வர் நேரில் சந்தித்ததை எல்லாம் விமர்சனம் செய்கிறார். நிவாரண உதவியை அரசியல் செய்ய நினைக்கிறார். நிர்மலா சீதாராமன் தன்னை ஒரு பிரதமர் என நினைத்துக் கொண்டு இது போன்ற விமர்சனங்களை வைக்கிறார்.” இவ்வாறாக தனது அறிக்கையில் கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளார் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்.

“புயல்மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணத் தொகையான ரூபாய் 21,692 கோடியை வழங்கிட முன்வராத ஒன்றிய அரசு, ரூபாய் 5,300 கோடியை மட்டும் அதாவது தமிழ்நாட்டுக்கு 4.61 சதவீத நிதியை மட்டும் தந்து விட்டு,இது மோடி அரசு தனது பா.ஜ.க. தமிழ்நாட்டில் வைத்திருக்கிற வாக்கு வங்கிகளைப் போலஅதாவது, பா.ஜ.க.வின் வாக்கு சதவீதத்திற்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு உள்ளதைத் தான் நினைவுபடுத்தி இருக்கிறார்”என நிதி மந்திரி தங்கம் தென்னரசு கேள்விகள் எழுப்பி இருக்கிறார்.

“ஸ்டாலினுக்கு INDIA கூட்டணிக் கூட்டம் தான் முக்கியம்; வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றிக் கவலை இல்லை” என்று நவீன அன்னை தெரசாவாக மாறி, உண்மைக்கு மாறான செய்தியைக் கூறி போதனை செய்கிறார் நிர்மலா சீதாராமன். அதே நேரம் புயல் மழை பேரிடர் தொடர்பாகப் பாதிப்புகளைக் கூறி டெல்லியில் பிரதமர் மோடியைச் சந்தித்துக்கோரிக்கை மனு அளித்தார் முதல்வர் ஸ்டாலின் என்பது அவருக்குத் தெரியாதா? தமிழகத்தில் புயல் பாதிப்பு ஏற்பட்ட சேதப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டு மக்களுக்கு நிவாரணப் பணிகளை வழங்கிவிட்டு, டெல்லி சென்று தலைமை அமைச்சர் மோடியை சந்தித்து நிவாரண நிதி கேட்டு மனு கொடுத்தார். 5,060 கோடி ரூபாய் கேட்ட இடத்தில் வெறும் 450 கோடி ரூபாய் தந்திருக்கிறது இதைப்பற்றி இந்த அம்மையார் பேசினாரா? கவலைப் பட்டதுண்டா?

மோடி அரசிடம் இதுவரை பேரிடர்களுக்கு தமிழ்நாடு அரசு நிதி கேட்டு தராத கணக்குகள் விவரம்: * 2015இல் பெருவெள்ளம் வந்தபோது தமிழ்நாடு அரசு கேட்டதோ ரூ25,912 கோடி. ஆனால் ஒன்றிய அரசு தந்தது வெறும் 1,748 கோடி தான். * 2016ஆண்டு வர்தா புயல் ஏற்பட்ட போது, தமிழ்நாடு அரசு கேட்டதோ 22, 573 கோடி ரூபாய் .ஆனால் தந்ததோ ரூ.256 கோடி மட்டுமே . *2017 ஒக்கி புயல் வந்த பாதிப்பின்போது, ரூபாய் 9,302 கோடி கேட்டும், ரூபாய் 133 கோடி தான் தந்தது. * 2018 ஆம் ஆண்டு கஜா புயல் ஏற்பட்டபோது ரூபாய் 17, 899 கோடி கேட்கப்பட்டது. தந்ததோ ரூபாய் 1, 146 கோடி.. *2019 ஆண்டு நிவர்புயல்/புரவி புயல் ஏற்பட்டபோது ரூபாய் 3,758 கோடி பாதிப்புக்கு கேட்டும் ரூபாய் 286.91 கோடி தான் தந்தது*2021 பெரு வெள்ளம் பாதிப்பு வந்த போது ரூபாய் 6,230.45 கோடி கேட்டும்,ரூபாய் 352.85 கோடி மட்டும்தான் மோடி அரசு தந்தது. மோடி அரசிடம் பேரிடர் நிவாரணமாக தமிழக அரசு கேட்ட மொத்த

**கவிஞர் தமிழ்தாசன்**
*கழக தீர்மானக் குழுத் தலைவர்*



தொகை ரூபாய் ஒரு லட்சத்து 25, 239 கோடி. ஆனால் கிடைத்ததோ ரூபாய் 5,671 கோடி மட்டுமே. அதாவது, சுமார் 4.5 சதவீதம் மட்டுமே. இப்படி தொடர்ந்து தமிழக அரசுக்கு துரோகம் இழைத்து வருகிறது மோடி அரசு.

தற்போது, 2014 முதல் 2022 வரை ஒன்றிய அரசின் நேரடி வருவாய் வரவில் தமிழ்நாட்டின் பங்காக ரூபாய் 5.16 லட்சம் கோடி தரப்பட வேண்டும். ஆனால், வரிப் பகிர்வாக நமக்குக் கிடைத்தது ரூபாய் 2.08 இலட்சம் கோடி மட்டுமே. மீதி ரூபாய் 3.08 இலட்சம் கோடியை எப்போது தரப்போகிறார் மோடி?...” எனக்கேள்வியாக எழுப்பப்பட்டு உள்ளது. உத்திரப்பிரதேசத்துக்கு 13,000 கோடி ரூபாய் தந்த ஒன்றிய அரசு, தமிழ்நாடு அரசுக்கு வெறும் 2,976.10 கோடி ரூபாய் மட்டுமே தந்து மாநிலங்களுக்கான வரிப்பகிர்வை விடுவித்துள்ளது.

தமிழகத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தைத் “தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது; சுனாமியைக் கூடப் பேரிடராக அறிவிக்கப்பட வில்லை” என்று மிகமோசமான உடல் மொழியுடன் நக்கலோடு விளக்கம் தருகிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன். இந்தியாவில் பேரிடர் மேலாண்மைச் சட்டம் என்பது சுனாமி வந்து ஒரு வருடம் கழித்து தான் இயற்றப்பட்டது என்பதை அவர் அமைச்சர் என்ற முறையில் அறிவாரா? பேரிடர் மேலாண்மை எனும் வார்த்தையை கற்றுக் கொடுத்தது சுனாமி வந்த பிறகுதான் என்பதை அவர் உணர்வாரா? தமிழ்நாடு கேட்பது வழக்கமாக S.D.R.F. க்குக் கொடுக்க வேண்டிய நிதி மட்டும் இல்லாமல், பேரிடர்களுக்கு கேட்கும் தொகை மட்டுமல்லாது, ஒரு பாதியாவது கொடுங்கள் ஒன்றியத்திற்கு மிக அதிகமாக வரியை கொடுக்கும் மூன்று மாநிலங்களில் ஒரு மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளது. உரிமையைத் தான் “... என்று அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்குப் பூவுலக நண்பர்கள் குழு சார்பாக சுந்தரராஜன் என்பவர் கேட்டிருக்கிறார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற முதலாக, ஏதாவதுபுயல், மழை வெள்ளம் வந்தால், பேரிடர் காலத்தில் சரி; போர் வந்தாலும் சரி; நெருக்கடிவரும் போதெல்லாம் இந்தியாவின் தலைமை வங்கி (Reserve Bank) நிதி உதவி செய்ய இருந்தது. அதாவது பேரிடர் நிதியை ஒரு இலட்சம் கோடி அதிலிருந்து தருவதாக நடைமுறை தொடர்ந்து இருந்து வந்தது. ஆனால் ரிசர்வ் வங்கியின் தலைவர்களாக இருந்த இரகுராம் ராஜன், உர்ஜித் பட்டில் போன்றோரை ஒருவர் பின் ஒருவராக அழுத்தம் கொடுத்து மோடி அரசு வெளியேற்றியது. பா.ஜ.க தனக்கு வேண்டியவரை நியமித்து அப்பேரிடர் நிதியை அனைத்தையும் எடுத்து செலவழித்து விட்டது. ரூபாய் ஒரு லட்சம் கோடி பணத்தை எடுத்து என்ன செலவு பண்ணியது என்ற புள்ளி விவரத்தை இதுவரை மோடி அரசு தரவில்லை.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை தளபதிமு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, நேரடியாக நியாய விலைக் கடைகள் மூலம் மக்களிடம் வழங்கி வருவதை விமர்சனம் செய்து, கேள்வி எழுப்பி இருக்கிறார் நிர்மலா சீதாராமன். ஏன் வங்கிகளின் மூலம் வழங்கப்படாமல், நிவாரணத் தொகையை நேரடியாக மக்களுக்கு வழங்குகிறார்கள்? என்று கேள்வி எழுப்பி இருக்கிறார். இப்படி கேள்வி கேட்பவர்கள், இந்திய நாட்டு வங்கிகளில் போடப்பட்டுள்ள சேமிப்புப் பணத்தைக் கடனாக வழங்கிய பல இலட்சம் கோடிகளை வசூலிக்காமல் ரூபாய் 25 இலட்சம் கோடியை மோடி அரசு ரத்து செய்தது டன், தங்களுக்கு வேண்டிய கார்ப்பரேட் நிறுவன முதலாளிகளுக்கு தாரை வார்த்துள்ளதே... அது யாருடைய அப்பன் வீட்டு பணம்? இது இந்திய ஏழை, எளிய, நடுத்தர மக்களுடைய சேமிப்பும் வரிப்பணமும் அல்லவா? வங்கியில் பணம் எடுப்பதாக இருந்தால் குறைந்தபட்ச வங்கி இருப்புத்தொகை (Minimum Balance) இருக்கவேண்டும். மகளிருக்கான கலைஞர் உரிமைத் தொகை வழங்கப்படும்போது இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலை நிலவியது. வங்கிகளை கையாளும் ஒன்றிய நிதிமந்திரிக்கு இதுபற்றி தெரியாமால் போனது வியப்பாக இருக்கிறது!

அம்மையாருக்கு இப்போது வங்கியின் மீது இவ்வளவு பெரிய பற்றும் , பாசமும், அன்பும், அரவணைப்பும், ஆதரவும் ஏற்பட்டிருப்பது வியப்பிற்குரியதாக இருக்கிறது. இந்திய வங்கிகளைச் சூறையாடியவர்கள் இப்பொழுது வங்கியின் மேல் பாசம் இருப்பது போல் பாசாங்கு காட்டிக்கொண்டு நடிக்க தொடங்கி இருக்கிறார்கள். மக்கள் பணி செய்து வரும் தளபதி அரசு மேல் கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. காந்தாரி குழவிக் கல்லை எடுத்து தனது வயிற்றில் குத்திக் கொண்டது போல,இப்பொழுது பா.ஜ.க. கட்சியைச் சேர்ந்த மந்திரிகளும் மற்றவர்களும் விமர்சனப் பேச்சுகளால், ஆபாச, அருவறுக்கத்தக்க உச்சரிப்பு வார்த்தைகளால் இதுபோல் உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒன்றிய அரசின் பிரதம மந்திரி கிசான் யோஜனா என்ற பேரில் சிறு குறு விவசாயிகளுக்கான ஒரு திட்டம். 4 மாதத்திற்கு ஒரு முறை 2000 ரூபாய் வீதம் ஆண்டிற்கு 6 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு. மானியமாக உதவித் தொகை வழங்கப்படுகின்ற திட்டம். எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில், இந்தத் திட்டத்தில் மிகப்பெரிய அளவில் தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் மோசடியாகவிவசாயிகளுக்கு ரூபாய் 6000 வீதம் வழங்கியதில் 110கோடி ரூபாய் மோசடிநடந்து விட்டது என்றும்; 5.5 இலட்சம் பேர் (ineligible people) விவசாயிகள் எனப் போலியாகப் பணம் வாங்கி விட்டார்கள் என்றும் இதில் பல அதிகாரிகள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. இப்படி 110 கோடி ரூபாய் மோசடியாக வழங்கப்பட்டுள்ளது என்று கண்டு பிடிக்க ப்பட்டதே. (The Hindu_9th Sep 2022) அவை ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வங்கிகள் மூலமாகத்தான் என்பதை நிர்மலா சீத்தாராமன்கள் உணர்ந்தனரா? அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த இந்த ஊழல்கள் ஒன்றிய அரசால் விசாரிக்கப்பட்டது. அது என்னானது? இந்தப் பணப் பட்டுவாடா செய்யப்பட்டது வங்கிகள் மூலம் தானே...! இதற்கு அம்மையார் என்ன சொல்லப் போகிறார்?

இதைப் போல கர்நாடகத்தில் இறந்து போன விவசாயிகளுக்கு ரூபாய் 442 கோடி ரூபாய் கொடுப்பதாகச் சொல்லி கடந்த மாநில பா.ஜ.க. ஆட்சியில் மிகப் பெரிய மோசடி நடைபெற்றதாகக் கூறப்பட்டுச் செய்திகள் வந்தன.. வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட இத்தொகை ஊழல் நடைபெற்றது என்று பெரிய அளவில் விசாரிக்கப்பட்டது (went to ineligible dead farmers P.M.Kisan Money2792022). அது மட்டுமல்ல; அசாமில் விவசாயிகள் திட்டத்தில் ரூபாய் 3,000கோடி அளவில் ஊழல் முறைகேடு நடைபெற்றிருக்கிறது என்றும்,அசாம் விவசாயத்துறை மந்திரி போரா மீதும் பா.ஜ.க.வினர் மீதும் குற்றம் சாட்டப்பட்டது. வேளாண் திட்டத்தின் கீழ் நடைபெற்ற இந்த ஊழலை விசாரிக்க வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டது. அத்திட்டமும் வங்கியின் மூலம் தான் பணப் பட்டுவாடாக்கள் செய்யப்பட்டன என்பதை நினைவில் கொள்ள வேண்டும்! தமிழ்நாடு அரசோடு முட்டி மோதிக் கொண்டிருக்கும் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் இப்படியான மோசடி ஊழல்களுக்கு நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் பொறுப்பேற்று பதவி விலகத் தயாரா?

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தில் 99999 - 99999 என்று ஒரே போலி செல்போன் எண்ணில் 7.5 இலட்சம் பயனாளிகள் இணைக்கப்பட்டு, ஊழல் அடைந்திருக்கிறது. ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சிகிச்சை பெற்ற நோயாளிகள் 88,760 இறந்து விட்டார்கள் ஆனால், அவர்கள் இறந்த பிறகும் சிகிச்சை அளிக்கப்பட்டதாகச் சொல்லி 2 லட்சத்து 14 ஆயிரத்து 923 காப்பீட்டுக் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுக் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப் பட்டது வங்கிகள் மூலம் வழங்கப்படவில்லையா? தகுதி இல்லாத குடும்பங்கள் இந்த திட்டத்தின் பயனாளிகளாகப் பதிவு செய்யப்பட்டு சுமார் 22 கோடியே 44 இலட்ச ரூபாய் வரை மோசடி நடைபெற்றுள்ளது. இது பற்றி நாங்கள் சொல்லவில்லை; சி.ஏ.ஜி. எனும் ஒன்றிய அரசின் தணிக்கை அறிக்கைக் குழு மோடி அரசின் மோசடியைஅம்பலப்படுத்தி இருக்கிறது. இதற்கு நிர்மலாக்கள் என்ன பதில் சொல்லுவார்கள்?

இது மட்டுமா பாரத் மாதாத் திட்டம், துவாரக விரைவுப் பாதைக் கட்டுமானத்திட்டம், சுங்கச் சாவடி கட்டணங்கள், அயோத்தியா மேம்பாட்டுத் திட்டம், கிராமப்புற அமைச்சகத்தின் ஓய்வூதியத் திட்டம், விமான வடிவமைப்பு திட்டம் இப்படியான ஏழு விதமான ஊழல்கள் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது. இவை அனைத்தும் பல கோடி ரூபாய் நிதியைக் கையாளும் மோசடிகள் வங்கி மூலமாகவே, அரங்கேற்றப்பட்டுப் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. இதனைத் தலைமைக் கணக்காயர் (C.A.G.) தந்த அறிக்கை பட்டவர்த்தனமாக அம்பலப்படுத்தி இருக்கிறது என்பதை நிதி மந்திரி நிர்மலா சீத்தா ராமன்கள் மறுக்க முடியுமா? அல்லது மறைக்கத் தான் முடியுமா? பட்டவர்த்தனமாக நடந்த இந்த மோசடியை ஒப்புக் கொள்கிறாரா? இல்லையா?

இப்படியான ஊழல் செய்த நபர்களின் வீட்டுக்கு இது வரை ஏன் ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சி.பி.ஐ.போன்ற புலனாய்வுத் துறைகள் சென்று, விசாரணை ஏதும் நடத்தவில்லை? இதுபோன்ற மோசடி கையாடல் செய்யப்பட்ட தொகைகள் எவனுடைய அப்பன் வீட்டுப் பணம்? எனக் கேட்கத் தூண்டுகிறதா இல்லையா? அவை யாவும் மக்களுடைய வரிப்பணம் அல்லவா!

இப்படி ஆணவத்தோடு பேசுவது நிர்மலா சீத்தாராமனுக்கு ஒன்றும் புதிதல்ல. “ஓட்டல் சாப்பட்டுக்கு ஜி.எஸ்.டி. வரி அதிகமாக போடுறீர்களே?..... இது நியாயமா? என்று கேட்டபோது உங்களை யார் ஓட்டலில் சாப்பிட சொன்னது?” என்று அலட்சியமாக பதில் சொன்னவர் தான் அவர். வெங்காய விலை ஏறி போச்சே மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள். விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று எம்.பி.க்கள் பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டபோது “வெங்காயம், பூண்டு சேர்த்து கொள்ளாத குடும்பம் என்னுடையது.” அது பற்றி எனக்குத் தெரியாது” என்று ஆணவத்தோடு கூறியவர்தான் இந்த நிதி மந்திரி. ரஷ்யா உக்ரைன் போரின் போது இந்திய மாணவர்களை மீட்பதில் தாமதம் ஏற்படுகிறதே என்று கேட்டபோது, சொந்த நாட்டில் படிக்காமல் உக்ரைனுக்குச் சென்ற மாணவர்களை என் தோளிலா தூக்கிவரமுடியும்?” என்று நக்கல் செய்து ஏளனமாகப் பேசியவர் தான் இவர்.

தமிழகத்தில் 4 தென்மாவட்ட வெள்ள பாதிப்பு குறித்து பிரதமர் மோடி, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு விவரங்கள் கேட்டறிந்தார். அப்போது தேவையான உதவிகளை ஒன்றிய அரசு செய்யும் என்று மோடி அவர்கள் உறுதிமொழி அளித்துள்ளார்.

டெல்லி திரும்பிய முதல்வர் தளபதி அவர்கள் உடனே, தென்பகுதிகளுக்குச் சென்று , வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 4 மாவட்டப் பகுதிகளுக்குச் சென்று மக்களைச் சந்தித்தார். அதேபோல், முன்னரே அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட களத்தில் நின்று நிவாரணப் பணிகள் மேற்கொண்டு வந்தனர். தொடர்ந்து இன்னும் அங்குச் சீரமைப்பு மற்றும் மீட்புப் பணிகள் செய்து வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டத்தில் வெள்ள பாதிப்புகளைப் பார்ப்பதற்கு தற்போது நேரில் வந்துள்ள ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் , தமிழக அரசின் சார்பில் நிவாரண நிதி கேட்டு 72 பக்கம் கொண்ட கோரிக்கை மனுவை தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கி உள்ளார்.




# வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா

**கோவில் தெருக்களில் அனைவரும் செல்லலாம் என்ற உரிமையைப் பெற்றுத் தந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வைக்கம் போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் !**







**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

தந்தை பெரியார் அவர்களின் தலைமையில்
கேரள மாநிலம் வைக்கத்தில் 1924ஆம் ஆண்டு நடைபெற்ற
வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழாவிற்குத் தலைமையேற்று,
நூற்றாண்டு மலரை வெளியிட்டு
விழாப் பேருரை நிகழ்த்துகிறார்கள்.

**மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர்**

**திரு. பினராயி விஜயன் அவர்கள்**

"பெரியாரும் வைக்கம் போராட்டமும்" நூலை வெளியிட்டு
முன்னிலையுரையாற்றுகிறார்கள்

**திரு. கி.வீரமணி அவர்கள்**

**தலைவர், திராவிடர் கழகம்**

சிறப்புரையாற்றுகிறார்கள்

**நாள்: 28.12.2023, வியாழக்கிழமை நேரம் : காலை 11.15 மணி**

**இடம்: சென்னை வர்த்தக மையம், நந்தம்பாக்கம், சென்னை**

## அனைவரும் வருக! வருக!!

**சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப.,**
தலைமைச் செயலாளர்

செ.ம.தொ.இ./1452/வரைகலை/2023

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

**வெளியீடு : இயக்குநர்,** செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை – 600 009

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் **பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்.**




# 50 இடம் பொருள் கலைஞர்



# பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்

‘பழம்படு பனையின் கிழங்கு பிழந்தன்ன’ என ‘நாரைவிடு தூது’வும், ‘மடலேறுதல்’ என தொல்காப்பியமும், ‘இரும்பனம் புடையல் ஈகை வாங்கல்’ என ‘பதிற்றுப்பத்து’ம் பனையைப் பாடியிருக்கின்றன. திருக்குறளின் முப்பாலிலும் பாடப்பட்டது பனைமரம், திருக்குறள் எழுதப்பட்டதே பனை ஓலையில்தான்.



இப்படிப் பனையைப் பாடாத சங்க இலக்கியங்களே இல்லை. அந்த அளவுக்கு தமிழர் வாழ்வோடு கலந்துவிட்ட ஒன்று பனை. நீலகிரியைத் தவிர, தமிழ்நாட்டின் மற்ற அனைத்து மாவட்டங்களிலும் பனைத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். நீர் பாய்ச்சத் தேவையில்லை, உரமூட்ட அவசியமில்லை, பூச்சிக்கொல்லிகளைத் தெளிக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. பதநீர், நீராபானம், ஓலை, நுங்கு, கட்டை, நார் என பனையில் பயனில்லாத பகுதி ஒன்று என இல்லவே இல்லை.

## பனை மரங்களின் எண்ணிக்கை

ஆனால், அறிவியல் வளர வளர, உலகம் நவீனமடைய நவீனமடைய பனையும், பனைசார்ந்த பொருட்களும் நம்மை விட்டு விலகிக்கொண்டே சென்றன. அன்று பனையால் வேயப்பட்ட கூரை வீடுகள் இன்று சிமெண்ட் வீடுகளாக மருவியிருக்கின்றன. கருப்பட்டி ஒன்றே இனிப்புக்கான மூலமாக இருந்த காலம் மாறி, இன்று ஆலைக் கரும்புகளால் சர்க்கரை உற்பத்தி அபரிமிதமாகிவிட்டது.

‘கள்’ ஒன்றே மதுவாக இருந்த நிலைமை மாறி, உள்ளூர் முதல் உலக நாடுகள் வரை எத்தனையோ மதுபான ஆலைகள் முளைத்துவிட்டன. இப்படியான நவீனமயமாதல் காரணங்களால், பனைசார்ந்த பொருட்களுக்கான தேவை குறைந்து, பனைத் தொழிலாளர்கள் வாழ்வில் இருள் சூழ்ந்தது. பனை மரங்களின் எண்ணிக்கையும் குறையத் தொடங்கியது. சந்தைப்படுத்துதலுக்கும் வாய்ப்புகள் குன்றியதால், பலர் அத்தொழிலை விட்டு, வெளியேறத் தொடங்கினர்.

வருமானம் குறைந்து, சந்தை வாய்ப்புகளும் சரிந்ததால், பனை சார்ந்த தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்தது. நலிந்துபோன இத்தொழிலாளர்களின் நலனுக்காக எண்ணற்ற குரல்கள் ஒலித்தன.

## துயரக்குரல்கள்

எவர் கண்ணிலும் படாத துன்ப-துயரங்கள் கலைஞர் கண்ணில் மட்டும் எளிமையாய் பட்டுவிடும். அப்படித்தான் பனைத் தொழிலாளர்களின் துயரக் குரலும் கலைஞர் காதுகளை எட்டின.

பனைத் தொழிலாளிகளின் குடும்பங்கள் படும் வேதனைகள் கலைஞர் கண்களில் விழுந்தன.

2006-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 1-ஆம் தேதி, கலைஞர் பனைத் தொழிலாளர்களுக்கான தனி நலவாரியத்தைத் தொடங்கினார். அதன் தலைவராக குமரி அனந்தன் நியமிக்கப்பட்டார். எந்த அங்கீகாரமும் இல்லாமல் இருந்த பனைத் தொழிலாளர்களுக்கு, இந்த அமைப்புசாரா நலவாரியம் பல வழிகளில் பேருதவியாய் அமைந்தது.

## பதநீர் விற்கும் முறை

பனைத் தொழிலாளர்கள் அதிகம் நிறைந்த ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பதநீர் குளிரூட்டும் நிலையம் அமைத்துக் கொடுத்தார். பதநீருக்கான கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 4 ரூபாயில் இருந்து 10 ரூபாய் வரை உயர்த்தினார். பதநீர் இறக்க, ஓராண்டுக்கு மட்டுமே உரிமம் என்பதைத் திருத்தியமைத்து 3 ஆண்டுகளாக உயர்த்தினார்.

பதநீர், பனைவெல்லம் கொள்முதலுக்காகவும், நியாயமான விலை கிடைக்கவும், ஒரு கோடி ரூபாயை மானியமாக வழங்கினார். பதநீர் நீண்ட நாட்கள் கெடக்கூடாது என்பதற்காக, இந்தியாவிலேயே முதன்முறையாக ‘டெட்ரா பேக்’-இல் அடைத்து பதநீர் விற்கும் முறையை அறிமுகப்படுத்தினார்.

பனங்கற்கண்டு மிட்டாய்களைத் தயாரிக்கச் செய்து நியாய விலைக்கடைகள், பல்பொருள் அங்காடிகளில் விற்பனை செய்ய வழிவகுத்தார். பனைத் தொழிலாளர்களுக்கு இயந்திரம் மூலம் மரம் ஏறுவதற்கான பயிற்சி வழங்க உத்தரவிட்டார்.

## 40 ஆயிரம் பேர் பதிவு!

இவ்வாறாகப் பனைத் தொழிலாளர்களின் வாழ்வில் வெளிச்சம் பாய்ச்சும் பல திட்டங்களை வகுத்து, செம்மையாகச் செயல்படுத்தினார் கலைஞர். அதன் பயனாய், பனைத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் முதல் ஆண்டுக்குள்ளேயே 40,000-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பதிவு செய்தனர்.

மாவட்டம்தோறும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, உறுப்பினர் சேர்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பனைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித்தொகை, ஓய்வூதியம், விபத்துக் காப்பீட்டு வசதிகள் எனப் பல்வேறு நலத்திட்டங்கள் நலவாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டன.

வறட்சியில் காய்ந்துபோன சருகுகளுக்கு மத்தியில், கொட்டிய மழைக்குப் பின் துளிர்க்கும் அரும்பாய் வசந்தம் பெறத் தொடங்கிய பனைமரத் தொழிலாளர்கள் வாழ்வில், மீண்டும் வறட்சியை வலிந்து திணித்தது 2011-இல் ஜெயலலிதாவின் ஆட்சிக்காலம்.

2012-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18-ஆம் தேதி காலாவதியான பனைத் தொழிலாளர்கள் நலவாரிய உறுப்பினர்களின் பதவிக்காலத்தைத் திருத்தியமைக்காமல் காலாவதியாக்கியது அ.தி.மு.க அரசு. ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகளும் நலவாரியத்தைப் புதுப்பிக்க எள் முனையளவு முயற்சியைக் கூட கிள்ளிப்போட மறுத்தது அ.தி.மு.க அரசு.

மீண்டும் 2021-இல் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தவுடன், தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத்துக்குப் புத்துயிர் கொடுத்தார் நமது முதலமைச்சர் அவர்கள்.

2022-ஆம் ஆண்டு ஜூன் 14-ஆம் தேதி எர்ணாவூர் நாராயணன் தலைமையில் நலவாரியம் அமைக்கப்பட்டு, அலுவல்சார் உறுப்பினர்கள், அலுவலர்சாரா உறுப்பினர்கள், வேலையளிப்போர் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். 10 ஆண்டுகால இடைவெளியால் தொய்ந்துப்போன நலவாரியத்தில், மீண்டும் உறுப்பினர் சேர்க்கை தொடங்கப்பட்டு, மாவட்டம்தோறும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

2021-22 வேளாண் பட்ஜெட்டில் ‘பனை மேம்பாட்டு இயக்கம்’ என்ற தனி இயக்கம் அறிவித்து, 30 மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகள், 1 லட்சம் பனங்கன்றுகள் முழுமானியத்தில் வழங்கப்பட்டன. 2022-23 வேளாண் பட்ஜெட்டின்படி, ரூ.2.02 கோடியில் இந்த இயக்கம் விரிவுபடுத்தப் பட்டது.

## பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

124 இடங்களில் மதிப்புகூட்டப்பட்ட பனைப் பொருட்கள் தயாரிப்புக் கூடங்கள் அமைக்கப்பட்டன. பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் சார்பில் பனைவெல்லம், பனங்கற்கண்டு, பிற பனைசார் பொருட்களைத் தூய்மையான முறையில் தயாரிக்கப் பயிற்சி, மகளிருக்குப் பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கப் பயிற்சி வழங்கப்பட்டுப் பனைத்தொழிலுக்குப் புத்துயிர் கொடுத்திருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’.

மரம் ஏறுவதற்கான கருவிகளையும் வழங்கி வருகிறது, கழக அரசு. ரேசன் கடைகளில் பனைவெல்லம், கருப்பட்டி விற்பனையையும் தொடங்கி வைத்திருக்கிறார் முதலமைச்சர். கலைஞர் நூற்றாண்டையொட்டி குமரி முதல் கும்மிடிப்பூண்டி வரை ஒரு கோடி பனை விதைகள் நடும் முயற்சியையும் பனைமரத் தொழிலாளர் நலவாரியம் முன்னெடுத்திருக்கிறது.

நெளிவின்றி நீண்டு வளரும் பனை மரங்களைப் போல, பனை மரத் தொழிலாளர்களும் ஏற்றம் பெற கலைஞர் போட்ட விதை, இன்று ‘திராவிட மாடல்’ ஆட்சியில் விருட்சமாகிக் கொண்டிருக்கிறது. பனை வாழும் வரை பனைத் தொழிலாளர்களால் கலைஞரின் புகழும் நீண்டு வாழும்.

**...வலம் வருவோம்**

## திராவிட வாசிப்பு!

பெரியார்-அண்ணா-கலைஞர் ஆகியோர் முன்னெடுத்த சமூக-அரசியல்-பொருளாதாரச் சீர்திருத்தங்களால் பயன்பெற்ற ஓர் இளைஞர் திரள், திராவிட அரசியலைத் தொடர்ந்து சமூக ஊடக வெளியில் பேசியும் எழுதியும் வருகிறது. கொரோனா காலகட்டத்தில் இத்தகைய குரல்களைச் சங்கமிக்கத் தொடங்கப்பட்ட மின்னிதழ்தான் ‘திராவிட வாசிப்பு’. ஓர் இளம் பட்டாளம் முன்னெடுத்த கூட்டு முயற்சியின் விளைவாக மாதந்தோறும் இம்மின்னிதழ் வெளியாகிக் கொண்டிருந்தது. சிங்கப்பூரைச் சேர்ந்த மென்பொறியாளர் ராஜராஜன் இப்பணியை மேற்கொண்டு வருகிறார்.

பெரியார், அண்ணா, கலைஞர், பேராசிரியர், மணியம்மையார் ஆகியோருக்கு சிறப்பிதழும் வெளியானது. அரசியல் படைப்புகள் மட்டுமின்றி, சிறுகதை , திரைப்பட விமர்சனம், கவிதை உள்ளிட்டவையும் இவ்விதழில் இடம் பெற்று வருகின்றன. பெருவாரியான இளம் தலைமுறை எழுத்தாளர்களை அடையாளம் கண்டு, அவர்களது படைப்புகளை வெளியிட்ட ‘திராவிட வாசிப்பு’ மின்னிதழ் இப்போது தொகுக்கப்பட்டு ‘இளைய தலைமுறையின் புதிய திராவிடம்’ என்ற தலைப்பில் அச்சுப் புத்தகமாக 608 பக்கங்களில் வெளியாகி இருக்கிறது.

## :.ப்ளாஷ்பேக்



### தலைவர் பேச்சில் திகைப்பு!

1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பொன்னேரி தொகுதிக்கு சொற்பொழிவாற்ற வருகை தந்தார். 1967 தேர்தலில் வென்று பொன்னேரி சட்டமன்ற உறுப்பினராக இருந்த என் தந்தை திரு.நாகலிங்கம் அவர்கள் 5 வயது சிறுவனாக இருந்த என்னையும் தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, தலைவரை சந்திக்க அழைத்துச் சென்றார். சிறுவனாக இருந்தபோதும், தலைவர் கலைஞரின் பேச்சினைத் திகைப்பாய் கேட்டதாக என் தந்தை சொல்லி இருக்கிறார். 1971 தேர்தலிலும் கழகத்தின் சார்பில், என் தந்தை வெற்றி பெற்றார். அவசரநிலைப் பிரகடனத்தின்போது கைது செய்யப்பட்டு, இன்றுவரை ‘மிசா நாகலிங்கம்’ என்றே அறியப்படுகிறார்.



மோகன்ராஜ் நாகலிங்கம்

**-மோகன்ராஜ் நாகலிங்கம், பேரூர் தி.மு.க. முன்னாள் செயலாளர், மீஞ்சூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### நீதிக்கட்சி மாநாடு!

**1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24, 25 ஆகிய 2 நாட்கள் திருவாரூரில் நீதிக்கட்சியின் மாகாண மாநாடு, பெரியார் தலைமையில் நடைபெற்றது. 50 ஆயிரம் பேருக்கு மேல் கலந்துகொண்ட இந்த மாநாட்டில், 35 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில், ‘ஸ்ரீ’ என்ற வடமொழிச் சொல்லைப் பெயருக்கு முன்னால் பயன்படுத்தக்கூடாது, ‘திரு’ என்ற வார்த்தையையே அரசாங்கம் பயன்படுத்த வேண்டுமென்பதும் மிக முக்கிய தீர்மானம். அதன்பிறகே ‘ஸ்ரீ’, ‘ஸ்ரீமதி’ என்ற வார்த்தைகள் நீங்கி ‘திரு’, ‘திருமதி’ என்ற வார்த்தைகள் புழக்கத்திற்கு வந்தன.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 342




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131